[illegible]

V.3[illegible] No.29 12 June 1930.

JL
[illegible]211, N28KN
N30.3.26
189108

1249

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ௵ ஜூன் ௴ 12௳ [No 24

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 461 |
| 2. | அப்பர் (யுத்தக்கலை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 463 |
| 3. | குறுந்தொகை (பாட்டு 87—90) K. இராமரத்நம் ஐயர் B. A. | 464 |
| 4. | தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) | 466 |
| 5. | கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. | 468 |
| 6 | நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—5 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. | 470 |
| 7. | வாழையும் புலவனும் நவாலி - க. சோமசுந்தரம் பிள்ளை | 472 |
| 8. | மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L. | 473 |
| 9. | இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் முடிவு) T. S. நடராஜபிள்ளை. B A., B.L | 475 |
| 10. | வர்த்தமானம் | 479 |


## கலாநிலயம்

### கல்லாத பேர்களே நல்லவர்களோ!

8- SEP 1930 189168

**2**

தற்காலச் சர்வகலாசாலைமுதல் ஆரம்பப் பள்ளிக்கூடம் வரையில் பயிற்றிவைக்கின்ற பாவம் இதுதான்—படிக்கவு மெழுதவுந் தெரிந்தமோடு கற்றுமுற்றித் தேர்ந்ததாவோர் பொல்லாப் பொய்ந் நினைவைப் புகுத்திவைத்தல். தாய்மொழியை எழுதிப் படிக்கமட்டும் பயின்றிருப்பவர்கள் பெரும்பான்மை இந்நினைவிற்கு ஆளாவதில்லையெனினும், இந்தப் பயிற்சியை முன்னிட்டு வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிக்கத் தலைப்பட்டுவிடுவாராயின் பிறகு தமது அறிவு மிகவும் விளக்கம்பெற்றுவிட்டதாயவொரு எண்ணங்கொண்டு வரவரத் தாம் மேனிலை முன்னேற்றம் முதலிய நலங்களை அடைந்துவிட்டதாய்க் கருதி, வர்த்தமானப் பத்திரிகைகளையும் வாசிக்கலாற்றாப் பேதைப் 'பாமரர்' எனப் பிறரை மதித்து, கத்தரிக்காய் சமைத்தல்முதல் கடவுளைத் தொழுதல் ஈறாக இடைநின்ற விடயங்களனைத்திலும் தாம் கண்ட உண்மையாய்க் கழறிநிற்கும் பொய்ந்நலங்களை அவர்களுக்குப் போதிக்கப் புகுகின்றனர். வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிக்கும் ஆற்றலுடன் தமிழிற் சிறிது இலக்கணப் பாடமும் கேட்டு இலக்கியத்தில் சில புஸ்தகங்களும் பார்த்திருந்தால், ஒருசிலர் கல்வியும் கல்வியினாலாய பயனும் முற்றிலும் பெற்றுவிட்டதாய்க் கருத்திற்கொண்டு, உலகம் ஜாதி மதம் அரசியல் முதலிய முன்னேற்றங்களில் தாம் கண்டது அப்பாமரர் கண்டிலரென இரங்கி அன்னவர்க்கு அறிவுரைகள் புகட்டிய வண்ணமா யிருப்பவரும் உளர். தமிழிலிச் சிறு பயிற்சியுடன் ஆங்கிலமொழி ஒன்றிரண்டு பேசவும், ஆங்கில வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பவர்களாய்ப் பாவனைசெய்யவும் பழக்கம் ஏற்பட்டுவிடுமாயின் அப்புறம் உலக அறிவிற்கெல்லாம் உறைவிடம் தாமே யென்னத் தாமும், இவர்களே யென்னப் பிறரும், எண்ணுவது இயற்கையாகின்றது.

ஆங்கிலப் பயிற்சிபெற்றுச் சர்வகலாசாலைப் பட்டங்களின் நிழலில் தவழ்ந்து உத்தியோகம் முதலிய தொழிலை மேற்கொண்டு வர்த்தமானப் பத்திரிகைகளுந் தாமுமாய்த் தழுவி, ஒழிந்தவேளையிற் பலரும் நாள் முழுவதுஞ் சிலரும், பாமர ஏழை மாக்களது முன்னேற்றத்தைப் பேசிவருந் தன்மையு மன்னதே. "கற்றனோம், கற்றனேம், என்னே எம் கல்வி"— (We are educated, you see)—என்று தாமே களிப்பதும், "கற்றவர் இவர் அறியாத தொன்றில்லை" என்று ஏனையோர் இவர்களை வழிபடுவதும் நேர்வதால் பெருகுகின்ற தீமைகளை நாம் கண்டுவரவில்லையா. பிள்ளை, சீமைக்கும் போய் வந்துவிட்டால், உற்றார் பெற்றார் சுற்றத்தார்க் கெல்லாம் அவன் சொல்வதனைத்தும் வேதவாக்கு, செய்வதனைத்தும் சாமர்த்தியம். ஆசாரங்களைப்பற்றிப் பேசுவார், மனைவாழ்க்கையைப் பற்றிப் பேசுவார், ஊணும் உடையையும் பற்றிப் பேசுவார், வியாபார கைத்

தொழில்களைப் பற்றிப் பேசுவார், இராஜப தந்திரம் பேசுவார், எந்திர ஆச்சரியங்களைப்பற்றிப் பேசுவார்; அறுந்த கைக்குச் சுண்ணும்பு கொடாத லோபிகள் இவர்களிற் பலர், "கல்வியும் உணவும் உடையும் இல்லாமல் நம் ஏழைச்சனங்கள் எண்ணிறந்தோர் வருந்திநிற்கக் கோவிலைக் கட்டிக்கட்டிப் பணத்தைப் பாழாக்குகின்றனரெ"ரெனப் பரிகசித்தும் பழித்தும் பேசவும் பேசுவார். தாமே தெரிந்துகொள்வதற்கு எத்துணையுளதேனும் நினைவையெல்லாம் அறவே ஒழித்து, மேலுஞ் சில கற்கவேண்டுமெனுங் கருத்தின்றி, பேதைமையும் பேராசையும் தூண்டி வைக்க, கல்லாதாரென்றவர்க்குப்' புத்திபுகட்டி அவர்களை முன்னேற்றமடைவிக்கச்செய்துவரும் முயற்சிகளால் வளரும், பொய்யும் பகையும் கொலையும் வசையும் இலஞ்சமும் இழிவும் நாமின்று கண்டு கூசவேண்டியவர்களா யிருக்கின்றோமே. இவைகளால், மக்கள் நோக்கமும் வாழ்க்கையும், வருவாயேனும், ஒருபடியேனும் உயர்ந்ததென்றுரைப்பதற்கில்லையே வால்ட் விட்மன், அமரிக்கர் நிலைமையைப்பற்றிப் பகர்ந்த தாழ்மைகளையெல்லாம் முன்னேற்றமென்னும் பெயரால் நம்மிடை கொண்டு குடிவைத்த பொறுப்புப் பெரும்பான்மை 'கற்றவர்' எனும் இனத்தைச்சேர்ந்தவர்களைச் சார்ந்து நிற்கின்றது. தெரிந்து சிலரும் தெரியாமற் சிலரும் இப்பொறுப்பை மேற்கொண்டு விவகரிப்பவர் கடவுளிற்கு உத்தரம் சொல்லுநாள் கடியதா யிருக்குமென்பதற் கையமில்லை.

எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பினும், சான்றோர் உறவினாலும், குலநலத்தினாலும், உள்ளுணர்வின் உண்மையாலும், உத்தமராய் எத்தனையோ பலர் ஆண்பெண் இருபாலார்க்குள்ளும் இவ்வுலகின்கண் இன்னுமுளர். இன்னவர் நிழலிற்குமுன் நிற்கவும் தகுதிவாய்ந்தவர் பண்டிதர்க்குள்ளும், கலாசாலைப்பட்டம் பெற்றவர்க்குள்ளும் இருப்பவர் மிகச்சிலர் என்பது ஆய்ந்தோய்ந்து பார்த்திருப்பார் அனைவர்க்கும் எளிதில் புலப்பட்டிருக்கும். பாமரர்களிற் சிலர் குடிக்கலாம், அதனால் அவர் குடி கெடினுங் கெடலாம்; எனினும் கற்றவர் என்ற பேரால் முழங்குவோரைப் போல் இவர் மற்றவர் குடியைக் கெடுப்பதில்லை. கல்லாத ஏழைமாக்களைவிடத் தாம் எவ்வகையில் உயர்ந்தவர்களென்றெண்ணி அவர்களுக்குக் கல்வியும் பொருளும் கைகூட வேண்டுமென்று சர்வகலாசாலைப் பட்டமும் வருவாயின்மிகுதியும் உடைய பலர் வாசா கைங்கரியங்கள் செய்து வருகின்றனரென்பது, வெளிப்படைபோல் தோன்றினும், ஆழ்ந்து நோக்குங்கால் அறிவது அருமையாகின்றது. பொய்யும் வஞ்சனையும் இலஞ்சமும் பொறாமையும் உலோபமும் அற்பத்தனமும் உடல்நோயும் மனத்தளர்ச்சியும் இக்காலக் கற்றவரினத்தில் இருக்கின்றவளவில் பதினாயிரத்திலொருபங்குகூடக் கல்லாதாரிடைக் காணப்படாமையால், பதினாயிரத்தில் ஒருவர் படித்திருப்பதையே பாராட்டுவதும் தக்கதாகின்றது. கடவுளையும், அக்கடவுளுணர்ச்சியை நெடுங்காலமாய்வளர்த்து வந்த மக்கள் தம் இதயமேயெனக் குடிவைத்த கோயிலையும் பழிப்பாரைப் படியாதாருள் காணலருமை. படித்தவர்களிலும் சிலர் கடவுளைப் பழித்திகழ்வதில்லையெனின், தற்காலப் போக்குவரவு விரைவுகளினுக் கிடையே, பழிப்பதற்குங்கூட அக்கடவுளை நினைக்க நேரமில்லாமையே காரணமாதல்வேண்டும்.

ஆனால் தற்காலப் படிப்பினால் கெடாமல் நல்லவர்களாயிருப்பவர் இரண்டொருவர்கூட இல்லையென்று நாம் இங்கு வாதிக்கவில்லை. படியாதவர்களிலும் பலர் கெட்டவர்களா யிருக்கின்றனர் என்பதையும் மறுக்கவில்லை. படித்தவர்கள் தாம் கெட்டதுமல்லாமல் மற்றவர்களையும் கெடுத்துக்கொண்டு வருகின்றனர் என்றால் பின்னதற்குத் தக்ககாரணம் கூறியதாயிற்று. படித்தவர்களில் ஒருசிலர் நல்லவர்களா யிருப்பதற்குக் காரணம் உணரப் புகுங்கால், முன்சென்ம வாசனையோ, பெற்றோர் செய்த தவமோ, தடுத்தாட்கொள்ளும் பரமன்தன் அருளேயோ, என இத்தகை நினைவுகள் எழுவது இயற்கையே. காரணங்களிவையெனத் தேர்தல் இக்கட்டுரைவரையில் இன்றியமையாததன்று. எதுவாயினும், படித்தவர் படியாதவர் எனும் இவ்விருதிறத்தோர்தம் குணம் நிலை பயன் முதலியன முன்னிங்கு நாம் உரைத்தவை மிகுதி பற்றி உண்மையெனக் கொள்ளவேண்டியனவேயன்றி, இவைகளுக்கு எதிராகத் தோன்றும் ஒன்று இரண்டு விடயங்களைக் காட்டி மறுக்கக்கூடியனவல்லவென்பதை யுணர்ந்தால் இக்கட்டுரையின் கருத்து ஐயந்திரிபிற்கு இடமின்றிப் புலப்படும் என இயம்பத் துணிகின்றோம்.

எல்லாப் பெரியோரும், உயிரேயெனப் போற்றியுள கல்வியைக் 'கலாநிலயம்' மாறுபடக் கெடுதிக்கு மூலமெனப் பழிக்கின்றதென நம் வாசகர்களில் ஒருவரும் நினைக்கமாட்டார் என்பது திண்ணம். கல்வியென்ற போலிப்பெயரால் இக்காலம் நடைபெறுகின்ற முறைகளையும், அம்முறைகளால் மலையிலக்காக விளைந்துநிற்கும் தீமைகளையுமே இங்கெடுத்துப் பேசுகின்றோமென்பது வெளிப்படை. ஆதலால் ஒன்றும் ஐயுற வெய்தவேண்டா. இந்நாள் உலகநிலையை நோக்குங்கால் பதினாயிரத்திலொருவர் படித்திருப்பதே மிகையெனத் தோன்றுகின்றது. சர்வகலாசாலைக் கட்டிடங்களை யெல்லாம் வேரோடிடித்துத் தள்ளவேண்டும் என்று இயம்பிய பர்னார்ட் ஷா இதனையே அவருக்குரிய மொழியின் வன்மையோடுவிளம்பினார். இங்கிலாந்தில் மிக்க பேர்பெற்று விளங்கும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைமாணவனொருவன் சென்றவாரம் தன் ஆசிரியனைச் சுட்டுக்கொன்ற செய்தி எல்லார்க்கும் எட்டியிருக்கும். படித்தகொலையிதற்கும் பாமரக்கொலைக்கும் ஏற்றத் தாழ்வுளதென்றெண்ணுவோர் எண்ணுக. இக்காலப் படிப்பு இத்தனையில்லாவிட்டால் சுயநயமும் கன்மனமும்இவ்வளவு அதிகமாக, தெய்வபக்தியும், இயற்கை அன்பும், நல்லொழுக்கமும் இவ்வளவு குறையா. அறிவு அறிவு என்று பெயரிட்ட அறியாமைப் படுகுழியில் மாந்தர் போய்ப் பாயமாட்டார்.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

### 7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[445-வது பக்கத் தொடர்ச்சி]

(i) வில்லின் ஏற்றம் வில் வித்தை

யுத்தக்கலைகளில் ஆன்றோர் முதன்மையதாக வெண்ணியது வில்வித்தையேயாம். கையில் வில்லைப்பிடித்து நிற்பதே ஆண்மக்களுக்கு ஒரு அழகாகும்.

வல்லாடி நின்று வலிபேசுவார் கோளர் வல்லசுரர்
கொல்லாடி நின்று குமைக்கிலும் வானவர் வந்திறைஞ்சச்
சொல்லாடி நின்று பயில்கின்ற சோற்றுத் துறையுறைவார்
வில்லாடி நின்ற நிலையெம் பிரானுக் கழகியதே!

திருச்சோற்றுத்துறை - திருவிருத்தம் 6.

ஆய முடையது நாமறியோ மாணத்தவரைக்
காயக்கணைசிலை வாங்கியு மெய்துந் துயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
பாயும்வெண் ணீர்த்திரைக் கங்கையெம் மானுக் கழகியதே

ஷை - 7.

மாதர்களை வர்ணிக்கும்போதும் அவர் புருவம் வில்லை யொக்கும் என்பர் புலவர்.

வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமே லருவி வைத்தார்
கல்லருளி வருசிலையா வைத்தா ரூராக்
கைலாய மலைவைத்தார் கடவூர் வைத்தார்
சொல்லருளி யறநால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளாற் றிருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

திருநல்லூர் - திருத்தாண்டகம் 4.

அல்லல் மிக்க வாழ்க்கையை யாத ரித்தி ராதுநீர்
நல்ல தோர்நெ றியினை நாடு துய்ந டம்மினோ
வில்லையன்ன வாணுதல்வெள்வ ளையோர் பாகமாம்
கொல்லை வெள்ளை யேற்றினான் கோடிக் காவுசேர் மினே

சுந்தரர்

சுத்த வீரனுடைய தோளுக்கு அழகு செய்யும் அணிகலம் வில்லாயுதமே யாம்:—

கற்பொலிதோட் சலந்தரனைப் பிளந்த வாழிக்
கருமாலுக் கருள்செய்த கருணை யான்காண்
விற்பொலிதோள் விசயன்வலி தேய்வித் தான்காண்
வேடுவனாய்ப் போர்பொருது காட்டி னான்காண்
தற்பரமாந் தற்பரமாய் நிற்கின் றான்காண்
சதாசிவன்காண் டன்னொப்பா ரில்லாதான்காண்
வெற்பரையன் பாவை விருப்பு ளான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 7.

பல ஆயுதங்க ளிற்பத் திரிபுரமழிப்பதற்குத் தக்க ஆயுதம் என்று சிவபெருமானால் எண்ணப்பட்டது வில்லன்றோ?

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதியானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கு மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேத நான்கும்
கல்லாலி னீழற்கீ ழறங்கண் டானைக்
காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

திருநள்ளாறு - திருத்தாண்டகம் 8.

சிவபெருமான் கொண்ட வில்லும், நாணியும் பாணமும் போர்த்தொழிற்குப் பொருந்துவன வல்ல. ஏனெனின் "நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம், பாணந்தான் மண்தின்ற பாணமே-தாணுவே, சீராரூர் மேவும் சிவனேநீ யெப்படியோ, நேரார் புரமெரித்த நேர்" என்றனன் காளமேகம் அவ்வாறிருந்தும் அத்தன்மையானபொருள்களைக்கொண்டும் சிவபெருமான் வில்லையே பகைவரை யழித்தற்குரிய கருவியென் றெண்ணினர்போலும். இதையே அப்பரும்,

நிலையிலா வூர்மூன் றொன்ற நெருப்பரி காற்றம் பாகச்
சிலையுநா ணதுவு நாகங் கொண்டவர் தேவர் தங்கள்
தலையினாற்றரித்த வென்புத் தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.

திருவீழிமிழலை - திருநேரிசை 4.

திருஞானசம்பந்தரும் வில்லையே "வெல்படை" யெனப் பாடியிருப்பதுங் காண்க:—

வார்மலி மென்முலைமா-தொரு-பாகம தாகுவர்
வளங் கிளர் மதியர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண்-மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல்-வனு-மல்லிகொ டாமரைம்
மிசை யவன் னடிம்முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே.

யாழ்மூரி 9.

சுந்தரமூர்த்திநாயனார் தன்னைச் சூறைகொண்ட திருமுருகன்பூண்டி வேடுவர் வில்லைக்காட்டி வெருட்டினர் என்பார், அக் 'கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்' எறிந்தது அம்பன்று, கற்களேயாம் என்றனர். ஏனெனில் வில்லைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் அங்கு நேரவில்லை யென்பது குறித்தே:—

வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர்
விரவ லாமை சொல்லிக்
கல்லி னாலெறிந் திட்டு மோதியுங்
கூறை கொள்ளு மிடம்
முல்லை தாது மணங்கமழ்
முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லை யாகினி
யெத்துக்கிங் கிருந்தீர், எம்பிரானீரே!

திருமுருகன்பூண்டி, பதிகம் 2.

எல்லா ஆயுதங்களும் பயன்படாவெனநப்புங்காலத்திலேயே வில்லை வளைத்துச் சரமாரி பொழிவது வீரரின் தொழிலாயிருந்தது. இதைச் சுந்தரரும் திருவதிகைவீரட்டானத் திருப்பதிகம் 9-வதுசெய்யுளில் குறிப்பிடுகின்றனர்:—

திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித்தொருகணையாற்றொழில்பூண்டசிவ
கருந்தாள மதகளிற்றி னுரியானைப் பெரிய [னைக்
கண்மூன்று முடையானைக் கருதாத வரக்கன்
பெருந்தோள்க ளலைந்து மீரைந்து முடியு
முடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே

ஆகையால் வில்லான் என்பதே ஒரு பெரும் பட்டமாக நம் முன்னோர் காலத்தில் எண்ணப்பட்டது:—

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

திருநாரையூர் - திருத்தாண்டகம் 1.

வில்லாடி வேடனே யென்றே னானே
வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றே னானே
சொல்லாய சூழலா யென்றே னானே
சுலாவாய தொன்னெறியே யென்றே னானே
எல்லாமா யென்னுயிரே யென்றே னானே
யிலங்கையர்கோன் றோளிறுத்தாயென்றேனானே
அல்லா வினைதீர்க்கு மையா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே.

திருவையாறு - திருத்தாண்டகம் 10.

# குறுந்தொகை.

[446-வது பக்கத் தொடர்ச்சி]

கபிலர்] 87 [குறிஞ்சி

முந்துற்ற சூளில் தலைமகன் பொய்த்தனனெனின் தெய்வம் அவனைத் துன்புறுத்தும் என்றஞ்சிய தலைமகள், தெருமைப்பொருட்டு அதனைப் பரவிநின்று கூறியது.

மன்ற, மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப; "யாவதுங்
கொடிய ரல்லர் குன்றுகெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று நுதலே;
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே"

(உரை). வெண்கடம்ப மரத்தினிடத்ததாகிய மிக்க அச்சத்தை விளைவிக்குங் கடவுள் தீயாரை வருத்தும் என்பார்கள். நிச்சயமாக, மலைபொருந்திய நாடராகிய எந் தலைவர் - (அவ்வாறு தெய்வந் தெறற்குரிய) சிறிதும் கொடியவர் அல்லர்; தானாகவே எனது நுதல் மிகவும் பசந்தது; பெரிய மெல்லிய தோள் மிகவும் (மெலிந்து) நெகிழ்ந்தது. (இவை அவரான் உண்டாயின அல்ல. அவர் முந்தைச் சூளிற் பொய்த்தாரென அவர்க்கு யாதொரு தீங்கும் இழைக்காதே. இதுவே யான் உன்னைப் பரவி வணங்கி வேண்டுவது.)

மன்ற - உறுதியாக, திண்ணமாக, என்ற பொருளில் வருமோர் இடைச்சொல். மராம்-வெண்கடம்பமரம். மன்றமரம் - மன்றினிடத்துள்ள மராமரம் என்றுமாம். (மன்று-ஊரின் நடுவாகிய பொதுவிடம்). பே - அச்சம், 'பே நாமுருமென வரூஉங் கிளவி, ஆமுறை மூன்றும் அச்சக் கிளவி' என்பது தொல்காப்பியம் (சொல் - உயிரியல் - 69) யாவதும் - சிறிதும். 'பசைஇப் பசந்தன்று' 'ஞெகிழ்ந்தன்று' - இரண்டும் மிகுதியைக் காட்டவந்த அடுக்கு. 'தோள் ஞெகிழ்ந்தன்று' என்று ஒருமையாற் கூறப்பட்டிருப்பினும் தோள் ஞெகிழ்ந்தன எனப் பன்மையாக்கிக் கொள்க.

'மராத்த......என்ப' என்றது தலைவியின் உட்கோள்; 'யாவதும் கொடியவ ரல்லர்......தோளே' என்றது, தெய்வத்தின் முன்சென்று அதனை முன்னிலையாக்கி அவள் சொல்லிப் பரவியது.

---

மதுரைக் கதக்கண்ணனார்] 88 [குறிஞ்சி

தலைமகனுக்குத் தான் இரவுக்குறி நேர்ந்ததைப் பாங்கி தலைவிக்குணர்த்தி, அவளை அதற்கு ஒருப்படுத்தக் கூறியது.

ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சொல்லுந் துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்;
வடுநா ணலமோ, தோழி, நாமே.

(உரை). தோழீ, ஒலிக்கின்ற (தெளிந்த நீரால்) வெள்ளிய அருவிகளையுடைய உயர்ந்த மலைநாடனாகிய நம் தலைவன், நடுராத்திரியில் சிறிய கண்ணையுடைய பெரிய களிறு வலிமைபொருந்திய புலியைத் தாக்கி அதன் பழைய மாறுபாட்டைத் தொலைக்கும் கிட்டுதற்கரிய காட்டிடத்துள்ள சோலைக்கு ஒருகால் வந்தாலும் வரலாம், (அவ்வாறு வருவதால் அவனுக்கு நேரக்கூடும்) ஏதத்துக்கு நாம் அஞ்சாமலிருக்கலாமோ?

முரண் - மாறுபாடு, பகைமை. சொல்லும் - போக்கும், தொலைக்கும். 'தொன்முரண் சொல்லுதலாவது,' முன்பு தன்னை வென்ற புலியைத் தான் இப்பொழுது வென்று பழம்பழியைத் தீர்த்துக்கொள்ளலாம். நடுநாள் - நள்ளிரா. வடு - ஏதம், தீங்கு. நாணல் - அஞ்சுதல். 'வடு நாணலமோ' என்பதற்கு, "அவ்விடத்துச் சென்று அவனைக் கூடுவதால் நமக்கு நேரும் பழிக்கு (வசைக்கு) நாம் நாணாமலிருக்கலாமோ?" என்றும் பொருள்கொள்ளலாம். முந்திய பொருளுக்கு, 'அங்குச்சென்று அவனுக் கேதம்வாராமற் காப்பது நங் கடன்' என்று சொல்லித் தலைமகளை இரவுக்குறியிடத்துச் செல்வதற்கு உடன்படுத்துவதாகவும், பிந்திய பொருளுக்கு, இரவுக்குறி நேர்ந்தால் வரும் பழிக்கஞ்சித் தலைமகளைத் தான் தடுப்பாள்போன்று அவள் மனத்தை அதற்கு இசைவிப்பாளாகவும் கொள்க.

---

பரணர்] 89 [குறிஞ்சி

தலைமகன் சிறைப்புறத்தானாக, அவனை வரைவுகடாவலுற்ற தோழி, தன்னுள்ளே சொல்லிக்கொள்வாள்போல்



"இக் குறமகள் வள்ளைப்பாட்டுப் பாடி அதனால் நன்மையைப் பெறுவாளாயின், ஊரார் கூறும் அலர்மொழுக்கு அழிந்து நாம் வருந்துவது என்னோ?" என்று அவன் கேட்கக் கூறியது.

பாவடி யுரல பகுவாய் வள்ளை,
ஏதின் மாக்கள் நுவறலு நுவல்ப,
அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே,
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடிநன் குறினே.

(உரை) பெரிய பூண்களையணிந்த சேரனது மிக்க அச்சத்தை விளைக்குங் கொல்லிமலையின் மேற்கிலுள்ள மலையின்மீது தெய்வமெழுதிய கரிய கண்ணையும் நல்ல அழகினையுமுடைய கொல்லிப்பாவையை ஒத்த இந்தமெல்லியலாகிய சிறுபெண், பரந்த அடியையும் விரிந்தவாயையும் உடைய உரலில் நெல்லைக் குற்றுவார் பாடும் வள்ளைப்பாட்டைப் பாடி, அதனால் நன்மையைப் பெறுவாளாயின், அயலார் சொல்வனவெல்லாம் சொல்லட்டும்; இந்த அறிவில்லாத ஊரார் செயலைக் குறித்து நாம் வருந்துவது எற்றுக்கு?

பாவடி - பரந்த அடி. 'பாவடிப் பகுவாய் உரல்' என இயைக்க. வள்ளை - வள்ளைப்பாட்டு; அதாவது, நெல் தினை முதலிய தானியங்களை உரலிற்பெய்து குற்றும்மகளிர் யாராலுமொருவனது பெருங் கொடை வீரம் முதலிய சிறப்புக்களைப் புகழ்ந்து பாடும் 'உலக்கைப்பாட்டு'. ஒருவனது வண்மையைப் பாடுதலின் இப்பாட்டு வள்ளை என்னும் பெயரைப் பெற்றதுபோலும்.

கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாநாம்
வள்ளை அகவவம் வா (கலித் - குறிஞ்சி - 6)

என்று கபிலரும்,

பைம்பொன் அறைமேற் பவழ முரலாக
வம்ப மணிபெய்து வான்கேழ் மருப்போச்சி
அம்பொன் மலைசிலம்ப அம்மனை வள்ளையுடன்
கம்பஞ்செய் யானைக் கரியவனைப் போற்றினர்

[சூளாமணி சுயம்வர - 106]

என்று தோலாமொழிப் புலவரும்,

பைங்கண் வேழத்துப் பணைமருப் புலக்கையின்
அறையுரல் நிறைய ஐவனப் பாசவல்
இசையொடு தன்னைய ரியல்புபுகழ்ந் திடிக்கும்
அம்மனை வள்ளை இன்னிசை

(பெருங்கதை இலாவண - உண்டாட்டு - 49-52)

என்று கொங்குவேளிரும்,

மனைச் சிலம்புவ மங்கல வள்ளையே (பால, நாட்டு - 31)

என்று கம்பரும் பிறரும் கூறியவற்றால் இவ்வழக் குண்மையை அறிக.

இவ்வடியிலுள்ள 'வள்ளை' என்பதை ஈற்றடியிலுள்ள 'குறுமகன் பாடி' என்பதோ டிணைக்க. ஏதின் மாக்கள் - அன்பில்லாராகிய அயலார். நுவறல் - அலர்தூற்றல், வசைமொழி கழறல். நுவல்ப - சொல்லுவார்கள்; சொல்லட்டும். ஊர்க்கு - ஊரைக்குறித்து. ஊர் - ஊரிலுள்ளார் கூறும் அலர்மொழி (இருமடியாகுபெயர்). பொறையன் - மலைக்கரசன்; சேரன். 'பொறையன் கொல்லிக்குடவரை தெய்வமெழுதிய கருங்கண் நல்லியற் பாவை' என்று கொண்டுகூட்டுக.

'கொல்லிப்பாவை' என்பது கண்டார்மனத்தைக் கவரும் பேரழகும், காமுகரை வருத்திக்கொல்லும் போற்றலும் அமைந்ததோர் பாவை. இதனால் இதற்குக் 'கொல்லி' என்னும் பெயர் வாய்த்தது. இது முன் வல்வில் ஓரிக்குச் சொந்தமாய்ப் பின் சேர் வசமான மலையின் மீது மேற்குப்பக்கத்தில் ஒரு தெய்வத்தாலோ பூதத்தாலோ எழுதப்பெற்றது. இப்பாவையின் பெயரால் அம்மலையும் 'கொல்லி' 'கொல்லிமலை' என்னும் பெயர்த்தாயிற்று, என்ப. இவ்வரலாற்றைப் பின்வரு மேற்கோள்கள் நன்கு விளக்கும்:—

பொறையன்
உரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயின்
........நெடுவரைத் தெய்வமெழுதிய
வினைமாண் பாவை. (நற்றிணை - 185)

கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்திய புதிதியற் பாவை.
(ஷை - 192)

பொறையன் கொல்லி
அடுக்கத்து வியலகம் பொற்பக
கடவு ளெழுதிய பாவை. (அகம். 62)

வல்வில் லோரிக் கொல்லிக் குடவரைப் பாவை
(குறுந் 100)

முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீந்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி. (ஷை 209)

பசும்பூட் பொறையன்
மாயிருங் கொல்லி. (ஷை 303)

இயல் - இலக்கணம், சாயல், அழகு. குறுமகள் - மடமங்கை, சிறுபெண். நன்கு - நன்மை, இங்கு, நன்மணம்.

---

மதுரை எழுத்தாளன்]
சேந்தன் பூதன்] 90 [குறிஞ்சி

வரைவு நீட்டித்த தலைமகன் சிறைப்புறத்தானாக, அவனது பிரிவை ஆற்றாளாகிய தலைவியை ஆற்றுவாள் போன்று அவனுக்கு அதனை அறிவுறுத்தித் தோழி வரைவு கடாயது.

எற்றோ, வாழி, தோழி, முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட,
இழுக்கிய பூநாறு பலவுக் கனியினை
வரையிழி யருவி யுண்டுறை தரூஉங்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பின் றன்றே.

(உரை). தோழீ, மிளகு முதிர்ந்து வளரும் மலைச்சாரலில் இரவில் இடிக்கு மேகத்தினின்று பெருமழை பெய்யவும் (உடலெங்கும்) அடர்ந்த மயிரினையுடைய ஆண் குரங்கு அஞ்சிப் பற்றியதால் ஒடிந்துவிழுந்த, பூவின் மணத்தைப் போன்ற மணத்தையுடைய பலாப்பழத்தை மலையிலிருந்து கீழிறங்கும் அருவி (ஊரிலுள்ளார்) நீருண்ணும் துறையிடத்துக் கொண்டுபோய்க் கொடுக்கும் இயல்பினையுடைய மலைநாடனாகிய நம் தலைமகனது கேண்மை எத்தன்மையதோ யானறியேன். நினது மெல்லிய தோள்களை வாட்டி வருத்தியும் அது மேன்மை உடையதாய் இருக்கின்றது அன்றோ?

'எற்றோ, என்பதைக் 'குன்றநாடன் கேண்மை' என்பதனோடு இசைக்க. கலை-முசுக்கலை; ஆண்குரங்கு. சால்பின்று சால்பிற்று.

உள்ளுறை உவமம்- பெருமழை பொழியக்கண் டஞ்சிய குரங்கு தொடக் கிளையினின்று நீங்கிய பழத்தை அருவி தாங்கிச்சென்று ஊரிடை உய்ப்பதுபோல, அலரொழக் கேட் டஞ்சி நான் தேற்றத் தேறுது கிளையினீங்கிய உன்னைத் தலைமகன் வரைந்துகொண்டு சென்று தன் மனைக்கண் இருந்து பலருமகிழ இல்லறம் புரிவான் என்பது.

# தமிழ்ப் பாடம் 126.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[452-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

அவன்மொ ழிந்தமொழி தன்செவிப் படலு
மருகிருந் தமுத ருந்துநீ
இவனு டன்சிலர் பகைக்கின் மற்றவர்த
மிசையு மாண்மையு மியம்புவாய்
புவன மொன்றுபட வரினு மென்றனொடு
பொருவ ராயினெதிர் பொர விடாய்
சிவனு மென்கணையை யஞ்சு மென்றுநனி
சீறினு னிரவி சிறுவனே. 69.

கர்ணன் தனதாற்றலைப் பின்னும் புகழ்ந்துபேசிப் பீஷ்மனுக்குப் பதில் உரைக்கின்றான்.

பதவுரை:

அவன் - பீஷ்மன், மொழிந்த - சொன்ன, மொழி- வார்த்தைகள், தன் - தன்னுடைய, செவி - காதில், படலும் - பட்டதும், இரவி - சூரியனது, சிறுவன் - புத்திரனாகிய கர்ணன்,

"அருகு - பக்கத்தில், இருந்து - இருந்து, அமுது - சோற்றை, அருந்தும் - உண்கின்ற, நீ - நீ, இவனுடன் - இந்தத் துரியோதனனுடன், சிலர் - சிலர், பகைக்கின் - பகைகொண்டால், (மற்று-அசை) அவர்தம் - அப்பகைவர்களுடைய, இசையும் - புகழையும், ஆண்மையும் - ஆற்றலையும், இயம்புவாய் - எடுத்துப் பேசுவாய்;

புவனம் - இப் பூவுலகத்திலுள்ளவர்கள் அனைவரும், ஒன்றுபட - ஒன்றாகச்சேர்ந்து, வரினும் - வந்தாலும், (என் னொருவனோடு போர்செய்யத் துணியார். அல்லது அவர் ஒருகால்) என்றனொடு - என்னோடு, பொருவர் ஆயின் - போர்செய்யத் துணிந்தாலும், எதிர்பொர விடாய் - எதிர்த்துப் போர் செய்வதற்கு என்னை விடமாட்டாய்;

சிவனும் - சிவபிரான் கூட, என் கணையை - என்னுடைய அம்பிற்கு, அஞ்சும் - பயப்படுவான்"

என்று - என்று, நனி - மிகவும், சீறினன் - கோபித்தான்.

விரிவுரை:—வண்மையெனுந் தனிப்பெருங்குணத்திற் சிறந்தவனாயினும், பாகன்மகனாய தன்னை யோர் அரசனாக்கிய துரியோதனன்பால் தோன்றிய நன்றியின் மிகுதியாலும் வீராவேசத்தினாலும் உரையின் தகுதியை மறந்து கர்ணன், பீஷ்மனைத் தாழ்த்தியும் தன் மேம்பாட்டை உயர்த்தியும் இவ்வண்ணம் பேசலாயினன். போராற்றல் பெருந்திறத்தில் சிவனிற் சிறந்தோர் இல்லையென்பது கர்ணன் எண்ணம். பின் பதினேழாம்போர்ச் சருக்கத்தில், சல்லியன் தனக்குச் சாரதியாய் வருவனாயின், "அர்ச்சுனனுக்கு அடலாழி அவனேயன்றிச் சிவன்வந்து தேர்விடினும் கொல்வேன் அந்தத் தேர்நின்றார் இருவரையும், செங்கோல் வேந்தே" என்ற கர்ணன் துரியோதனனுக்குக் கூறிய உறுதிமொழிகளும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. கரம்பாயினும் வீரியம் பேசேல் என்ற வாக்கில் கர்ணனுக்கு நம்பிக்கை இல்லை போலும்.

குறிப்பு:—இரவி + சிறுவன் = இரவி சிறுவன். நிலைமொழி உயர்திணையாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

---

இரவி மைந்தனொடு கங்கை மைந்தனெதிர்
வாய்மை யொன்றையு மிசைத்திலன்
பொரவ றிந்திடுது மன்றுவெஞ் சமரி
லென்றெ ழுந்துதனி போயினு
னரவ வெங்கொடி யுயர்த்த கோவுமிக
லரச ருக்குவிடை நல்கினன்
விரவுபைந் துளப மாலையான் விதுரன்
மனையி லுற்றது விளம்புவாம். 70.

இதற்கெதிர் யாதும் உரையாமல், "போரில் தெரியும் உன் பேச்செல்லாம்" என்பதோடு பீஷ்மன் அகன்றனன்.

பதவுரை.

கங்கை மைந்தன் - கங்கையின் மகனான பீஷ்மன், இரவி மைந்தனொடு - சூரியன் மகனான கர்ணனுக்கு, எதிர் வாய்மை - எதிர் வார்த்தை, ஒன்றும் இசைத்திலன் - ஒன்றும் சொல்லாமல், "அன்று - பின்னாள், வெம் சமரில் - கொடிய யுத்தத்தில், பொர - நீ சண்டை செய்யும்போது, அறிந்திடுதும் - உன் பேச்சிற்கேற்ற ஆற்றல் உள்ளதோ இல்லையோ என்பதை அறிவோம் போ," என்று-என்று சொல்லி, எழுந்து எழுந்து, தனி போயினன் - தனியாகப்போனான்.

அரவ - பாம்பாகிய, வெம் - கொடிய, கொடி - பதாகையை, உயர்த்த - தூக்கிய, கோவும் - அரசனாகிய துரியோதனனும், இகல்-ஆற்றல் பொருந்திய, அரசருக்கு - மன்னவர்களுக்கு, விடை நல்கினன் - விடைகொடுத்தனுப்பினன்.

பை - பசுமையான, துளபம் - துளசி, விரவு - சேர்ந்த, மாலையான் - மாலையையுடைய, விதுரன் - விதுரனது, மனையில் - வீட்டில், உற்றது - நிகழ்ந்ததை, விளம்புவாம் - இனிச் சொல்வோம்.

---

கிருஷ்ணன்தூதுச் சருக்கத்தில் பாடத்திற்கு நாம் எடுத்துக்கொண்ட பாகம் இதனோடு முடிகின்றது. இனி, நைடதத்தின் 'நளன்தூதுப் படலம்' அடுத்த ஜூலைமாத முதலிலிருந்து ஆரம்பமாகும்.

---

## இலக்கணம்.

### M. உரிச்சொற்றொடர்.

பெயர் வினைச் சொற்களைவிட்டு நீங்காமல் அவைகளது குணத்தைத் தழுவிநிற்கும் சொற்கள் உரிச்சொற்கள். இவை பெரும்பாலும் செய்யுளிலேயே பயிலப்பெறும். சால உறு தவ நனி கூர் கழி தட தவ மழ குழ கடி மா, முதலியன தமிழிற் பயிலும் உரிச்சொற்கள். இவைகளிலொன்று நிலைமொழியாயிருக்கத் தொடர்கின்ற தொடர் உரிச்சொற்றொடராகும். உரிச்சொற்றொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதும் மிகாததும் ஒரு விதிக்கடங்கிப் பயில்வதாய்க் காணவில்லை. எவ்வெச் சொற்களுக்குப்பின்



மிகுகின்றதென்பதும் எவ்வெச் சொற்களுக்குப்பின் மிகுகின்றதில்லை என்பதும் ஆன்றோர் வழக்கைக் கொண்டே அறிதல் வேண்டும்

I அகர ஈற்று உரிச்சொற்களுக்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகும் என்று பொதுவாகக் கொள்ளலாம்.

சால + பல = சாலப் பல.
தட + கை = தடக்கை.
தவ + கொண்டான் = தவக் கொண்டான்.
குழ + கன்று = குழக்கன்று.

குறிப்பு:—மழ என்பது அகர ஈற்று உரிச்சொல்லாயினும் அதன்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதில்லை.

மழ + களிறு = மழ களிறு.

II மற்ற ஈற்று உரிச்சொற்களுக்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகுவதில்லை.

உறு + புனல் = உறுபுனல்.
நனி + சீறினன் = நனி சீறினன்
கொடுமைகூர் + சகுனி = கொடுமைகூர் சகுனி
கழி + பேருவகை = கழிபேருவகை.
கடி + கா = கடிகா—(நளவெண்பா)
மா + பெரும் = மாபெரும்

குறிப்பு:—கடிக்கமலம் என்றும், அருங்கடிப் பெருங்காப்பு, என்றும், கடி என்னும் உரிச்சொல்லிற்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தும் சில விடங்களில் புணர்ந்திருக்கின்றது.

### N. அடுக்குத்தொடர்.

விரைவு வெகுளி வியப்பு இரக்கம் உவகை அச்சம் இகழ்ச்சி முதலிய மனோவிகாரங்களால், வந்த சொல்லே மீண்டும் வரப்பெற்று நிற்குமாயின் அத்தொடர் அடுக்குத்தொடர் எனப்படும்.

அடுக்குத்தொடரின் இடையில் வல்லினமெய் மிகாது.

பார் + பார் = பார்பார்—(விரைவு)
பாதகா போ + போ = போபோ (வெகுளி)
பெரிது + பெரிது = பெரிதுபெரிது—(வியப்பு)
தலைவா + தலைவா = தலைவா தலைவா—(இரக்கம்)
கரும்பு + கரும்பு = கரும்பு—(உவகை)
பாம்பு + பாம்பு = பாம்பு—(அச்சம்)
பொய் + பொய் = பொய் பொய்—(இகழ்ச்சி)

குறிப்பு:—"தயிர் தயிர்," "புளிபுளி," "பாக்கு பாக்கு", என விற்பனைப்பொருளை விளம்புவதற்கும் சொற்கள் அடுக்கி வருவதுண்டு. அப்பொழுதும் இடையில் வல்லினமெய் மிகாது.

தமிழில் இரட்டைக் கிளவிகள் என்பன சிலவுள. சலசல, கலகல, மளமள. தடதட, படபட, என்பன போல் இவை இரண்டுசொற்களாகப்பிரிக்கப்படாமல் ஒருசொல் போலவே நின்று பொருள்படும். கலகல, எனச் சேர்ந்துவருமானால்தான் அது ஓர் ஒலிக்குறிப்பைத் தந்து பொருள்படும். 'கல' என்று தனியாய் நின்றால் அச்சொல்லிற்கு எவ்விதக் குறிப்பும் எவ்விதப் பொருளும் இல்லை. கல, கள, மள, என்பவைகளை எப்பொருளிலும் எவ்விதத்திலும் பயில இயலாது. இதுதான் இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத்தொடரிற்கும் உள்ள வேறுபாடு. பாம்புபாம்பு என்பது போன்ற அடுக்குத்தொடரிலும், மளமள என்பது போன்ற இரட்டைக்கிளவியிலும் ஒரே சொல் இருமுறை வருகின்றதாயினும், அடுக்குத்தொடர் ஆகின்ற சொல் தனியாய் நிற்கும்போதும் பொருள்தர வல்லது; இரட்டைக்கிளவி யாகின்ற சொல்லோ ஒருபோதும் தனியாய் நிற்காது, நின்றாலும் பொருளில்லை பாம்பு, பார், பெரிது, தலைவா, கரும்பு, என முன் காட்டிய உதாரணங்களில் அடுக்குத்தொடராய் வந்திருக்கின்ற சொற்களுக்குப் பொருள் இருப்பதும், கல சல மள தட பட என்பவைகள் இரட்டைக்கிளவியாய் வராவிடில் பொருள் இல்லாமையும் எளிதில் உணரலாம். ஆகையால், மலைமலை, ஓடு ஓடு, வருகவருக, நில்நில், என எந்தச் சொல் வேண்டுமெனினும், விரைவு அச்சம் வியப்பு முதலிய பொருள் தரும்படி அடுக்கிவரல் கூடும். இரட்டைக் கிளவியோ அவ்வாறு வர இயலாது. தமிழ் வழக்கில் மளமள, களகள, பளபள, சலசல, கிடு கிடு என்பனபோல் சில சொற்கள்தாம் இரட்டைக் கிளவியாய்ப் பயின்று வருகின்றன.

இரட்டைக்கிளவிகள் பெரும்பாலும் ஒலிவகைகளைக் குறிக்கவரும்.

சலசல வென்று ஆற்றுநீ ரோடியது.
சளசள வென மழை பெய்தது.
மளமள வென மூங்கில் முறிந்தது.
களகள வெனச் சிரித்தான்.
கலகல வெனப் பேசினான்.
மடமட, தடதட வென்று வீடு இடிந்தது.
நறநற வெனக் பல்லைக் கடித்தான்.

சில இரட்டைக் கிளவிகள் ஒளி, விரைவு, முதலியவற்றின் மிகுதியைக் காட்டுதற்கும் வரக்கூடும்:—

பளபள வென இருந்தது.
குடுகுடு வென ஓடினான்.

நசநச வெனப் பேசினான், மசமச வென் றிருந்தான், கசகச வென் றிருக்கின்றது, என வெறுப்பைக் குறிக்கும் இரட்டைக் கிளவிகளும் உள. "களகள வெனக் கண்ணீர் சொரிந்தது" என, விரைவொடு மிகுதியையுங் காட்டக்கூடும்.

இரட்டைக்கிளவிக்கு இடையில் வல்லின மெய் மிகாது.

ஒட்டக்கூத்தர் பாடிய
**தக்கயாகப் பரணி**
(உரையுடன்)
மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.
இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.
விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[457வது பக்கத் தொடர்ச்சி]

முதலுங் கடையு முடித்தனர் கம்பர்.

தயரதன்தன் உணர்வே அனைய அவ் வவையிருந்
தோர்யாவரும் இராமனுக்கினிக் கோமுடி புனை
தலே முறையென ஒவ்வுதலும்,
அரசரை விடுத்தபின் ஞானை மன்னவன்
புரைதபு நாளொடு பொழுது நோக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான்

[அரசர்களுக்கு விடைகொடுத்து அனுப்பியபின், ஆக்ஞையை உடைய மன்னவனாகிய தயரதன், இராமனது பட்டாபிஷேகத்திற் கேற்ற ஒரு குற்றமற்ற நாளும் காலமும் பார்க்கும்பொருட்டு, உரைதெரிந்த ஜோதிடரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, மலைபோன்ற மண்டபத்தைச் சேர்ந்தான்]

அவரும் நாளொடு பொழுது தேர்ந்து சொல்லினர். ஆயினும் அவர் குறித்தமைத்த ஓரையெல்லாம் யாவதாயிற்று? மன்ன னின்னுயிர் மாயவும், அரசியர் முதலினோ ரழு தரற்றவும், நகரெலா மிருந்துயருற்றேங்கவும், செம்மலுஞ் சீதையும் இளவலொடு கொடுங்கானஞ் சென் றிடர்பெரி துழைக்கவும் இக் கணிதமாக்கள் நாளொடு பொழுது தெரிந்து வைத்ததாய் முடிந்ததன்றி வேறு எய்தியதென்! முடிபுனை திருவிழா நடைபெறாமல் அறவே அழிந்தது. கணித நூல் நுண்மையெல்லாம் கற்றுத் துறைபோகிய புலவரல்லாதாரைத் தயரதன் தன்னுடன் அழைத்துச் சென்றிரான். வசிட்டனே அனைய வித்தகர்களும் அவர் குறித்த ஓரையில் யாதும் புரை கண்டிலர். இன்னவர் கணித்தவொரு நல்லோரை பொல்லாங்கே பயந்ததெனின், சோதிடமென்பதே பொய்யேயோ, மற்று மெய்ச்சோதிடம் தெரியவல்லார் எங்குமே இல்லையோவென் றெண்ணவொண்ணு தென்ப தெங்ஙன மமையும். இதனை நோக்குங்கால், 'புரைதபு நாளொடு பொழுது போக்குவான்'' என்றிருக்கும் மற்றொரு பாடமே ஏற்றது போலும். இப்பாடத்தின்படி, "மன்னன், அன்றைக்கும் பட்டாபிஷேகத்திற்கும் இடையிருந்த நாட்களையும் காலத்தையும் கழிக்கும் நினைவினனுப் உரைதெரிந்த கணிதரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு மண்டபம் சென்றான்'' என இச் செய்யுள் பொருள்படும். கணித நூலின் குணமனைத்தும் தெரிந்திருந்த தயரதன் பொழுது போக்காகச் சோதிடரை அழைத்துச்சென்று அவரொடு உசாவினன் அல்லாது நாளுங் கோளும் அவர் குனிப்பதால் முடிபுனை திருவினை இடையூறின்றி நடைபெறுமென நம்பிச்செய்த கரும மன்றென்பது கம்பரது கருத்தென்க் குறும்பு கூறலாம். இதற்கேற்றவாறு "நூல்தெரி கணிதர்'' "மெய்தெரி கணிதர்'' என்னாது, "உரைதெரி கணிதர்'' என அடைமொழி தந்தனர். "இவர்களுக்கு நாளுந் தெரியாது, கோளுந் தெரியாது, தெரிந்தவர்போல் உரைக்கவே தெரிந்தவர்,'' எனக் கணிதரை வம்பிற்கே இழுக்கின்றாரோ இக் கம்பர். கம்பர்திறத்தில் சிறிது வம்புமுள தென்பது புதுமையன்று. முன்னே, அயோத்திமா நகரின்கண்,

மன்னவர் தருதிறை யளக்கு மண்டபம்
அன்னமென் னடையவ ராடு மண்டபம்
உன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்

இருந்தனவென் றுரைக்குங்கால், மறைப்பொருள் அனைத்துமுணர்ந்தார்போல் பலபடப்பற்பலர் ஓதுவாரெனினும், ஓதினோர் கேட்டோர் இருதிறத்தோர்க்கும் ஓதியதின்னதென உண்மையில் உன்னுதலரிதெனு மிரகசியத்தை மனத்திற்கொண்டு கம்பர், "உன்னரு மருமறை ஓது மண்டபம்'' என்று கூறியதும் வம்பின்பாற் படும் †. பின்னும், மிதிலைமாநகரக் கன்னிமாடத்திற்கண்டு கண்களவாடிய காரிகையின் நினைவிற்கே தன் உள்ளமும் உணர்வுந் துறந்து தானுந் தனியுமத் தையலுமே யாவதற் கவாவிய இராமன் "ஐயானோ ஒருநாளும் இவ்வாயாளன்'' என்று அயர்ந்தழியுமாறு சிறிது மிரக்கமின்றிக் கோசிகனது பெருங்கதையைச் சுவையுமற்ற சொற்களால் நெடிது நவின்ற சதானந்தமுனிவனும் முடிவுகண்டனன் என்பதை, $

ஈது முன்னர் நிகழ்ந்த திவன் துணை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னரு ணோர்ந்தனிர்
யாது மக்கரி தென்றனன் ஈறிலான்

எனப் பகரும் பாசுரத்தில், 'தவத்திற்கு ஈறிலான்' என்று அவனைக் குறிக்காது, 'தவம்' என்பது சொல்லெச்சமாய் நிற்கும் பாவனையில், 'பேச்சிற்கோர் ஈறில்லாதவன்' என்னும் பொருள்தோன்ற நிறுத்தியதும் வம்பலதேல் வேறு யாதென் றறியோம் இவ்வண்ணம் நகையுற நவிலுமியற்கை கம்பர்க் குண்மையால், நாளொடு பொழுது போக்குவான்' என்றுள பாடமே அவரது வாக்காக, அதன்பொருள் தேர்தலாற்றாச் சிலர் "பொழுது நோக்குவான்'' என மாற்றியிருத்தலுங் கூடும். பின்னரும் சோதிடரைக் கம்பர், கணிதமக்கள் என்னாது "கணிதமாக்கள்'' எனப் பேசுவார். ஆறறிவுயிர்க் கடுக்கா 'மாக்கள்' என்னும் சொல்லால் அவர்களைக் குறித்ததும் அன்னார் தொழிலையுந் தன்மையையும் இழித்துக்கூறுங் கருத்தினால் நேர்ந்திருத்தல் வேண்டுமென வற்புறுத்துவோமாயின், இதுகாறுமிங்கு விளையாட்டாகப் பாடபேதத்தின் அமைதியை ஆராய்ந்ததெல்லாம் வினையேபோல் தோன்றுமாதலின், மரபுச்சொல்லா யல்லாமல் 'மக்கள்' என்பதன் விகாரமே இங்கு மாக்களாகி நிற்கின்றதென நினைப்பதே நலம். கணிதரோடாய்தல் வீண் பொழுதுபோக்கே என்பது தயரதனது கொள்கையாக மட்டுமே இருக்கலாம். பின் 33-வது

† இவ்விடயம், வால்யூம் 1, பக்கம் 292ல், விரிவாக உரைக்கப்பெற் றிருக்கின்றது.

$ இவ்விடயம், வால்யூம் 2, பக்கம் 175 ல் விரிவாக உரைக்கப்பெற் றிருக்கின்றது.



செய்யுளில் 'சோதிட வித்தகர் எனப் பாராட்டுவதால் கம்பரது நன்மதிப்பிற்கு அன்னார் பாத்திரமாகின்றனர் எனக் கொள்வதும் அமையும்.

சோதிட சாத்திரத்தையோ, மற்று அதனைக் கையாண்ட மாக்களையோ தயரதன் நம்பாது அயிர்த்தானேனும், வடிமழுவாளவனைக் கடந்த தன் மைந்தன் முடிபுனைதற்கோ ரிடையூ றிழைக்கவல்லா ரீங்கிலர் என்னுந் துணிவினால், "பொருந்துநாள் நாளை நின் புதல்வற்கு'' என்ற அவர் சொன்னசொல்லை யேற்று ஆவன செய்வதற் கேவினான். வன் தாளின் இணை வணங்கி வளநகர் தொழுதேத்த மன்னனுவான் நின்ற இராமன், வசிட்டமா முனிவனால் நல்லுறுதியும் வாய்மையும் விளங்கவரும் அறவுரைகள் ஓதப் பெற்றனன். சடங்குகள் யாவுந் தொடங்கலாயின. அரசனது ஆணையின்படி வள்ளுவர் கோநகர் அணியுமாறு முரசறைந்தனர். அறையவே,

அங்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரியல்பெனப் பொலியு மெல்லையி
லின்னல்செ யிராவண னிழைத்த தீமைபோற்
றுன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

[அலங்கரிக்கின்ற ஆரவாரத்தோடு அவ் வயோத்திமாநகர், தேவர்கள் வாழ்கின்ற பொன்னுலகத்தைப்போல் விளங்குஞ் சமயத்தில், எல்லோர்க்கும் துன்பத்தைச் செய்கின்ற இராவணன் செய்த பாவமேபோல், மிகவுங் கொடிய மனமுடைய கூனி தோன்றினாள்.]

கூனியின் நாடக வரவிதனை நவிலும் முறை யிது நயமிக வுடைத்து. நகரின்கண் அன்று நடைபெறு மவைகளையும் கௌசலைசெய்த தானத்தையுங் கண்டு ஐயுற்ற கூனி விளைவது யாதென அயலுளோரை வினவியறிந்து நேரே கைகேசியின்பால் சென்றனளென முதனூல் கூறும். நாடகக்காட்சி நிகழ்த்தி வைக்குங் கம்பரோ முதலில் அவளைக் களத்தினிற் கொணர்ந்துகாட்டிப் பின் கேகயன்மகள் கோவிலின் மேல் உய்க்கின்றார். முதுகொடு மனமுங் கோணிய இப்புன்தொழில் கூனி இப்பெருங்கதைக்கோர் அச்சாணி போல்கின்றாள். மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர் நிசாத கணைகளால் நீறுசெய்வானித் தசரதன் மதலையாய் அவதரித்த எம்பிரானைப் பகைத்தவள்போல் பேருதவி புரிபவள் இவள். கூனிக்குஞ் சகுனிக்கும் ஒலியினாலும் குணக்கேட்டினாலும் மாத்திரம் ஒற்றுமை இருப்பதன்றிச் செய்கையினும் அவ்விருவருஞ் சார்ந்து நிற்கின்றனர். பகையெனும் பான்மையில் இராவணவதத்திற்கு உதவியாய் நின்றாள் இக்கூனி, பின் கிருஷ்ணவதாரத்தில் பாரதத்திற்குச் சகுனி பகைத்தானேனும் பக்கத்துணை யாகின்றான்.

இராமகதை இப்பொழுதுதான் ஆரம்பமாகின்றது; இராவண வதத்தோடு முடியும் இனி. கூனியின் வருகையோடு இராவணன் இறுதியை ஓர் உவமையால் இணைத்துவைக்கின்ற இச்சூழ்ச்சியின் சுவை சிறியதன்று. அவ்வுவமையும் அருமைமிக்கது. இராவணன் இழைத்த தீமையெல்லாம் ஓ ருருப்பெற்று இயங்குந் தோற்றங் காணவேண்டுமெனின் தோன்றிய இக் கூனியைக் காண்மி னென்பார். இல்பொருள் உவமை என்றதோடு இதன் திறமெலாந் தீர்ந்துவிடவில்லை. தத்துவமும் ஒன்று அதனுள் தயங்குகின்றது. பூவிலோன் புதல்வன் மைந்தனும், முப்புரங்கள் செற்ற சேவலோன் வைகிய கயிலையைப் பெயர்ப்பான் புக்கவனும், அமரரைத் தன் ஏவலில் வைத்தவனும், அருந்தவங்கள் புரிந்து பெருவரங்கள் பெற்றுளோனும் ஆயஇவ் விராவணனை அழிக்கவல்லது அவன்செய்த தீவினையேயல்லாக்கால் வேறுதானெது உளது. அவரவர் செய்த அவமே வந்து அவர்களை ஒறுத்தழிக்குமன்றிப் புறத்தினின் றொன்று நலிவது போல் தோன்றுவதெல்லாம் வீண் மாயத்தோற்றம். கோமகனைக் கண்ணுற்ற அந்நாள் மாலைப்போது விரகத்தால் வருந்திய சீதை, அன்றிற்குரற் காற்றாது அதனை, "அளியள் செய்த தீவினையே அன்றிலாக வந்தாயோ'' என்று வினவிய தத்துவமே, "இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்'' என்றுரைப்பதிலும் அடங்கியிருக்கின்றது. அறம்செய்த அறம்போல் அதனைக் காக்க இராமன் பிறந்தானெனின், தீயோன் இராவணன் செய்த தீமைபோல் அவனை அழிக்கக் கூனி தோன்றினாள். இராமனுக்கு நாள்வைத்த சோதிடர் பாபகிருகங்களை யெல்லாம் பார்த்து விலக்கியிருப்பார் திண்ணம். அன்னார் நூலில் விரித்த கோளிற்குள் அடங்காத கிரகம் இக் கூனியாகையால், இவளைக் குறிக்கொள்ளாது கணித்ததும் அந்தக்கணிதம் பொய்த்ததும் அவர் பிழையல்ல. கணிதம் பொய்த்ததென்று கூறுதற்கு மில்லை. தயரதனுக்கும் இராவணனுக்கும், சோதிடர்தாம் நல்லநாள் பார்த்துவைக்கவில்லையே. இராவணனது சாதகத்தைச் சோதித்திருந்தால் அவன் காலக்கோளாம் இக்கூனி ஒருகால் அதனில் தென்பட்டிருப்பினு மிருக்கலாம். இராமனுக்கே நாள்பார்த்துவைத்தனர். இராமன் மேற்கொண்டுள்ள கருமம் இராவணவதமே யன்றி முடிபுனைந்து வாளா அரசிருப்ப தன்று. கணிதர் மொழிந்த நாளும்பொழுதும் பிழையற விருந்ததாற்றான் இராமன் கருத்து நிறைவேறுமாறு கூனிவந் தன்று தோன்றினாள்.

தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியா ளுளைக்கு முள்ளத்தாள்
கான்றெறி நயனத்தாள் கதிக்குஞ் சொல்லினள்
மூன்றுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள்.

[தோன்றிய கூனியும், துடிக்கும் நெஞ்சும், தங்கிய கோபமும் வருந்தும் மனமும், பற்றியெரியும் கண்களும், தடுமாறுஞ்சொற்களும் உடையவளாய், மூன்று உலகத்திற்கும் ஒப்பற்ற துன்பத்தை விளைவிக்கும்பொருட்டு]

தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயின்மேல்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டை யுண்டதனைத் தன் உள்ளத் தெண்ணுவாள்.

[முற்காலத்தில் இராமனது கைவில்லினின்று எய்த மண்ணுண்டையால் அடிபட்டதனை மனத்தின் எண்ணி அப்பழம் பழியை இன்று தீர்க்கும்பொருட்டு; கோபத்தால் அதுக்கிய உதடோடு, கொவ்வைக்கனிபோன்ற வாயுடைய கேகயபுத்திரியின் மாளிகையை நோக்கி விரைந்து நடந்து]

நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாடனை விரைவி னெய்தினாள்

[நான்கு கடல்களிலும் விளைந்த மணிகளோடு தாமரைகளும் மலர்ந்துள ஒரு பால்கடலின் அலையில் விளங்கும் பவளக்கொடிபோல், கண்ணின் கோடியிலிருந்து அருள்

சொரிய, பொங்குகின்ற பஞ்சணையிற் படுத்திருந்த கைகேசியை விரைவில் அடைந்தாள்]

கூனியின் கோபத்திற்குக் காரணம் முதல் நூல் கூறவில்லையெனினும் வழங்கிய பிற கதையினின்றும், ஆழ்வார்தம் வாக்கினின்றும், பண்டைநாளிராகவன் பாணியில் கொண்டடித்த உண்டையைக் கம்பர் தக்கதெனத் தேர்ந்துகொண்டனர். முன்னாள் பட்ட வில்லுண்டையின் நினைவே இன்று கூனியின் கோபத்தைத் தூண்டியது என்று காட்டுவதுமன்றி, முதற் போரில் முதுகுதந்து வந்த இராவணன், தன்னையும் வென்ற அவ்வீரன் ஆற்றலை,

எறிந்தபோ ரரக்கராவி யெண்ணிலாவெள்ளமெஞ்சப்
பறித்தபோ தென்னை யந்தப் பரிபவ முதுகிற் பற்றப்
பொறித்தபோ தன்னனந்தக்கூனிகூன்போக உண் [டை
செறித்தபோ தோத்த தன்றிச் சினவுண்மை தெரிந்த [தில்லை

[கணக்கிலா வெள்ளம்போல் எதிர்த்த போர் அரக்கர்களது உயிரை வாங்கியபோதும், அவமானமுண்டாம்படி என்னை முதுகுகொடுத் தோடிவிடச் செய்தபோதும், அவ்விராமன் கடும்போர் புரியுமொரு முயற்சி செய்தானோ எனின், அல்லன்; முன் கூனியின் கூன் நிமிர்வதற்கென்று விளையாட்டாக உண்டையில் அடித்தபோது அவன் முகம் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே எங்களைப் புறங்கொடுத்தோட்டியும் உயிர்பறித்தும் வென்ற இந்நாளிலும் இருந்தது. எனின், சினத்துடன் போர் செய்வானாயின் அதுதான் எவ்வா றிருக்குமோ அறியேன்]

என வியந்த சொற்களினின்று, கூனியின்மீது இராகவன் பாணியில் உண்டை உய்த்தற்குமோர் விளையாட்டுக் காரணந் தெரியலாகின்றது. அயோத்தியில் இராமன் இளமையிற் புரிந்த இவ்விளையாட்டு, தென்னிலங்கை வரையிலும் எட்டியிருந்த தென்றால், இங்குஉண்டையில் உமிழ்ந்ததன் நோக்கத்தைப் பல ஆயிரம் செய்யுள்களுக்கப்பால் எட்டிப்பிடிக்கலாவதும் அமையாதோ!

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[448–வது பக்கத் தொடர்ச்சி]

முதல் பத்து—5-ம் பதிகம்

7-ம் பாசுரம்.

அடியேன் சிறிய ஞானத்த
  னறித லார்க்கு மரியானை
கடிசேர் தண்ணந் துழாய்க்கண்ணி
  புனைந்தான் றன்னைக் கண்ணனைச்
செடியா ராக்கை யடியாரைச்
  சேர்தல் தீர்க்குந் திருமாலை
அடியேன் காண்பா னலற்றுவ
  னிதனில் மிக்கோ ரயர்வுண்டே.

செடி - பாவத்தை, ஆர் - பொருந்திய, ஆக்கை - தேஹமானது (ஒரு தடவை மநுஷனாகவும் ஒரு தடவை தேவனாகவும் அடுத்தடுத்துப் பூர்வ கர்மவசத்தால் ஜந்மம் எடுத்துத் தேகமாகிற களேபரம்). அடியாரை - கேவலம் ஆத்ம தரிசனம் வேண்டுமென்று தன்னை ஆச்ரயிக்கிறவர்களை, சேர்தல் தீர்க்கும் - தேஹசம்பந்த மில்லாமல் அதைக் கழித்து ஆத்ம தரிசனத்தைக்கொடுக்கிற, திருமாலை-லக்ஷ்மியினிடம் மோஹங்கொள்ளும் ஸ்ரீமந் நாராயணனை, ஆர்க்கு மறிதலரியானை - அவன் கிருபையில்லாது ஒருவராலும் அறியக்கூடாதவனை, கடிசேர்தண்ணந்துழாய்க் கண்ணி புனைந்தான்தன்னை - நாளுக்குநாள் வாசனை ஏறும் குளிர்ந்த துளபமாலையைத் தரித்தவனை, கண்ணனை-ஸ்ரீ கிருஷ்ணபகவானை, அடியேன் - தாஸனான நான்-அவனுக்கு நம் சேர்த்தி ஹானியைக் கொடுக்கத் தக்கதென்ற விவேகமில்லாமல் - காண்பான் - காண வேண்டுமென்ற இச்சைகொண்டு, அலற்றுவன் - கூடக்கூட வைவேன், சிறிய ஞானத்தன்-இக்காரணம் கொண்டு அல்ப ஞானமுடையவனாகிறேன். இதிலும் மிகுந்த (அயர்வு) அஞ்ஞானம் உண்டோ.

குறிப்பு:—ஆழ்வார் இங்கு, தம்முடைய அநர்ஹதானுஸந்தானம் திரும்பிப் புத்தியஸ்தமாக "ஐயோ நான் பகவானைநேரேகண்டு தாஸ்யகைங்கரியம்செய்ய வேண்டுமென்று அபேக்ஷிக்கிறேனே? இதுஎவ்வளவு ஞானமில்லாமை. கைவல்யார்த்திகள் (அதாவது ஆத்மதரிசனம் மாத்திரம் அபேக்ஷிக்கிறவர்கள்) அவனுக்குஒருஇடர்ப்பாடில்லாமல் தங்களுக்குக்கேவலம் தேஹசம்பந்தத்தை ஒழித்துக்கொடுப்பதே பொருட்பாடென்று அவனை வேண்டி அது கைக்குக் கிட்டின பிறகு அவனைக் காண அபேக்ஷிக்காமல் அகன்று போகிறார்களே. அவர் எவ்வளவு பாக்கியவான்கள்" என்று தம்மை இகழ்ந்தும் மற்றவர்களைச் சிலாகித்தும் பேசுகிறார்.

8-ம் பாசுரம்.

உண்டா யுலகேழ் முன்னமே
  யுமிழ்ந்து மாயை யால்புக்கு
உண்டாய் வெண்ணெய் சிறுமனிச
  ருவலை யாக்கை நிலையெய்தி
மண்டான் சோர்ந்த துண்டேனும்
  மனிசர்க் காகும் பீர்சிறிதும்
அண்டா வண்ணம் மண்கரைய
  நெய்யூண் மருந்தோ மாயோனே.

பொழிப்புரை—அதிக சுலபமான மனுஷஜாதியில் பிறந்தருளித் திருவாய்ப்பாடியிலே போய்ப் புக்கு ஆய்ச்சியருடைய வெண்ணெயையும் நெய்யையும் உண்பதே தனக்கு லீலையாகக்கொண்டு அவர்களுக்கு ஒரு பரிமாணுகூடக் கிட்டாமலிருக்கும்படி ஸகலத்தையும் ஒருபடியாய் அமுதுசெய்தது, பண்டைக்காலத்தில் யுகத்தின்முடிவில் எல்லா உலகங்களையும் உண்டபொழுது அவற்றின் மண் ஏதேனும் நின்றுவிட்டதைக் கரைக்கவேண்டியதின் நிமித்தம் மருந்தாகவோ பகவானே கிருஷ்ணாவதாரத்தில் நெய்யையும் வெண்ணெயையும் பாண்டங்களில் கொஞ்சம்கூடச் சேஷியாதபடி அமுதுசெய்தாய்? அப்படிக்கில்லையே! ஆச்ரிதரோடு ஸர்வதிவ்வியமான சேஷ்டைகள் செய்து அவர் சமரசத்துடன் வாழ்ந்தாலல்லது, நீ தரிக்கமாட்டாமை பற்றியன்றோ அங்ஙனம் செய்தனை?

குறிப்பு:—இப்பாட்டில் பகவானுடன் நேரில் பேசுகிறார். இதற்குக் காரணம் அவன்தன் சௌசீல்யத்தைக் கிருஷ்ணாவதார நவநீதசௌரியத்தைக்கொண்டு இவருக்குப் புத்தியாஸ்த மாக்கினதாக நாம் கொள்ள வேண்டும். விலகிப்போனவர் நேராய்த் திரும்பினதுமல்லாமல் பகவானுடன் எதிர்த்தட்டில் நின்று "உண்டாய்" என்றும் "மாயோனே" என்றும் கூறநேர்ந்தது இதனாலேயே. இது பூர்வாசாரியார்களின் கருத்து

9-ம் பாசுரம்

மாயோம் தீய வலைவலைப்
  பெருமா வஞ்சப் பேய்வியத்
தூய குழவி யாய்விடப்பா
  லமுதா வமுது செய்திட்ட
மாயன் வானோர் தனித்தலைவன்
  மலராள் மைந்த னெவ்வுயிர்க்கும்
தாயோன் தம்மா னென்னம்மா
  னம்மா மூர்த்தி யைச்சார்ந்தே.

மலராள்மைந்தன் - லக்ஷ்மிக்குப் பிரிய யுவா; வானோர் தனித்தலைவன் - நித்தியசூரிகளான தேவர்களுக்குத் தலைவன். தீய - கொடியவளான, அலைவலை - பொய்ப்பேச்சை நிரம்பப்பேசி, பெரு மா வஞ்சப்பேய் - வெகு வஞ்சனையுடன் ஸ்தன்னியபானம் கொடுத்து அதில் கலந்திருந்த விஷத்தால் ஸ்ரீ கிருஷ்ணபகவானை ஒழிக்க எத்தனித்த 'பூதனை' என்ற பேய், வீய - இறந்துபடும்படி, விடப் பால்அமுது செய்திட்ட - அவளுடைய விஷமானபாலைத் தனக்கு நிரம்ப உகப்பாகக் கருதினாற்போல வெகு ரசமாய் உண்டு அவளை நசிப்பித்த, மாயன் - மானிடப்பிரவி போல் தோன்றித் தனக்கு அசாதாரணமான திவ்விய ரூபத்துடனும் ஸர்வசக்திகளுடனும் விளங்கும் ஆச்சரியபூதன்-இங்குப் பூதனையின் விருத்தாந்தம் எடுத்தது ஆழ்வார்க்கு முன் பிடித்திருந்த அநர்ஹதானுசந்தானமான அஞ்ஞானமான மனப்பேயை விரட்டிவிட்டதின்நிமித்தமாகக்கொள்ளவேண்டும். அம்-அழகான, மா-மேற்சொன்ன மாட்சிமைதங்கிய மூர்த்தியை - அல்லது சுவயம்பிரகாசமான மூர்த்தியை, சார்ந்து - கிட்டி - ஸம்ஶ்லேஷித்து, எவ்வுயிர்க்கும் - எல்லா ஆச்ரியர்களுக்கும், தாயோன் - ஒரு பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராமல் தாய்போலக் காப்பாற்றும் சுபாவமுடையவனை, தம்மான் - தனக்குத் தானே நாதனானவன், என்னம்மான்-ஆகையால் எனக்கும் கூட ஸ்வாமியானவனை, மாயோம் - ஒருபோதும் விடத் தக்கவ னல்லேன்.

குறிப்பு:—கீழ் 4-ம் பாசுரத்தில் பகவான் மாதாபோல் எல்லா ஜந்துக்களையும் ஒக்க ஒன்றுபோலே இரக்ஷிக்கிறானென்று அநுசந்தித்து அவன் சந்நதியில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டார். இடையில் கொஞ்சம் சஞ்சலசித்தம் வந்து கலங்கின ஆழ்வார் திரும்பியும் எல்லாப் பிராணிகளையும் ரக்ஷிக்கும் மாதா போன்றவனுக்குத் தன் காப்பும் தன் தொண்டும் இல்லாமல்போனால் அவனது ஸௌசீல்யம் அவனுக்கு வஸித்தியாதென்று பார்த்துத் திரும்பி அவனை அடைகின்றார். சேர்ந்தபிறகு இந்த அநர்ஹதாபுத்தியை விட்டுவிட்டேன். அவனை ஒருக்காலும் விட்டுச் சுவரூபஹானி அடையமாட்டேனென்று சபதம் கூறுகிறார்.

10-ம் பாசுரம்

சார்ந்த விருவல் வினைகளும்
  சரித்து மாயப் பற்றறுத்துத்
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத்
  திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி
  அகலங் கீழ்மே லளவிறந்து
நேர்ந்த வுருவா யருவாகு
  மிவற்றி னுயிராம் நெடுமாலே.

189/08

பதவுரை.

ஆர்ந்த ஞானச்சுடராகி - பரிபூர்ண ஞான ஜ்வாலையாகி, அகலம் கீழ்மேல் அளவிறந்து - எல்லாவிடத்திலும் வியாபித்தவனாய், நேர்ந்த - ஸூக்ஷ்மங்களான, உருவாய் அருவாகும் - அசேதனங்களாயும் சேதனங்களாயு மிருக்கும், இவற்றின் - இவ் வஸ்துக்களுக்கு, உயிராம் - அந்தராத்மாவாக நின்றுள்ள, நெடுமால் - என்பக்கல் மருளுற்ற மால்கொண்டவன், சார்ந்த - என்னைத் தொடர்ந்துள்ள, இருவல்வினைகளும் - புண்ணியபாப ரூபமான இரண்டுவித கர்மங்கள் எல்லாவற்றையும், சரித்து - ஒருபக்கமாகத் தள்ளி, மாய - பிருகிருதிமாய, பற்று அறுத்து-உலகவிஷயங்களில் ஆசையைத்தள்ளி, தீர்ந்து - தன்னையே நான் அடையும் பரம்பொருளாயும் அப்பொருளை அடையத் துணையாகவும் மனதால் நிச்சயித்து,தன்பால் மனம்வைக்க-(பால் ஏழாம்வேற்றுமை உருபு) திருத்தி - என்னை நன்றாகப் பண்ணி, வீடு - பரமபதத்தை, திருத்துவான் - அலங்கரியாநின்றான்.

ஆறாயிரப்படி உரைகாரர் மேல்கண்ட வியாக்கியானத்தினின்றும் சிலபாகம் விலகி உரை கூறுகின்றார். அவர் திருவுள்ளம் [எம்பெருமானுடைய எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்கை, ஞான சக்தி ஸர்வவியாப்தி முதலான குணங்களெல்லாம் என் ரக்ஷணநிமித்தமும் எனக்கு வைகுந்தம் கொடுப்பதின் பொருட்டும் (வீடு திருத்துவான்) ஆகையாலே அவனுடைய உத்கர்ஷம் வியர்த்தமாகப் போகத்தின் நிமித்தம் நான் அவனைப்பற்றி இனியொருக்காலமும் விடேன்" என்கிறார்] முதல் உரையில் வைகுந்தம் தனக்குக் கொடுப்பதாக அலங்கரிக்கிறான் என்றார்.

இரண்டாவது—வைகுந்தம் எனக்கு அவன் அளித்தற்காகவே அவனுக்கு ஸர்வ கல்யாண குணங்களு மிருக்கின்றன. அதுபற்றி நான் அவனை விடத் தக்கவன் அல்லேன் என்கிறார்.

11-ம் பாசுரம்

மாலே மாயப் பெருமானே
  மாமா யனேயென் றென்று
மாலே யேறி மாலருளால்
  மன்னு குருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழ ரிசைகாரர்
  பத்தர் பாவு மாயிரத்தின்
பாலே பட்ட விவைபத்தும்
  வல்லார்க் கில்லை பரிவதே.

''இப்படி எம்பெருமானுடைய சௌசீல்ய வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையும் ஆச்சரியமான திவ்விய சேஷ்டிதங்களையும் காலதத்துவமெல்லாம் பேசினாலும் ஆராத ஆசையுடையவனாய் அக்குணங்களையே தாரகமாக உடைய குருகூர்ச் சடகோபன் சொன்ன ஸர்வஜன இஷ்டமான ஆயிரத்தின் நடுவில் இருக்கும் இவை பத்தும் வல்லார்க்கு எம்பெருமானைவிட்டுப் பிரிகிறதானது துக்கமில்லை என்கிறார்'' ஆறாயிரப்படி பொழிப்புரை.

பரிவது - பிரகாரணானுகுணமாகப் ''பிரிதல்''-துக்கம்

## வாழையும் புலவனும்.

யாழ்ப்பாணம் - நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை இயற்றியது.

ஆர்கலி வளைஇய பாரகம் போர்த்த
கூரிருள் கழிந்தது; கோழிகள் கூவின;
கடவுளர் நிலைதொறும் படுமணி யிரட்டின;
பூங்குயி லிசைத்தன; புட்குல மார்த்தன;
வானக வாவி மீனலர் கூம்பின,
மண்ணக வாவி கண்ணலர் விழித்தன;
கண்படை கழன்று மன்பதை யெழுந்தன;
குடகடற் குளித்துக் குணகட லுதித்த
காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
நீல வானிடை யொருபனை நிமிர்ந்தனன்;
வேலையங் கதனிலொர் வீட்டினின் மெல்லியற்
சேயிழை நெடுங்கட் சேயிழை யொருத்தி
பரிவொடு முணர்த்திய குரலொடு மெழுந்தே
கால்முகங் கழுவிக் கடவுளைக் கைதொழு
திரவு விடியினும் விடியா திரவெனப்
பருவா லுழந்த பாவல னொருவன்
நன்பத மூறிய மென்புனல் மாந்தி
ஊசி துன்னிய தூசொன் றுடுத்துத்
தந்தையின் பின்னர்த் தன்புடை வந்திடும்
இந்திரப் பழங்குடை யிடுக்கின னெழுந்து
புள்ளும் பொழுதும் பொருந்தக் கொளாது
செழுநிதி படைத்த செல்வரைத் தேடிப்
பழுமரம் நாடும் பறவையிற் படர்வோன்,
இன்றல காலை யெட்டுநா ளின்னும்
சென்றவா வென்று செப்பினர் செலுத்திடப்
பழவினைப் பயனுக் குளமிக நொந்து
பச்சைப் புரவிப் பல்கதிர்ச் செல்வன்
உச்சி திரும்பிப் பச்சிமம் நோக்கும்
அளவது காறும் வழிவழி யியங்கிக்
கால்நடை தளர வாயினீர் புலர
மெய்யினீர் சிந்தப் பையெனப் பையென
வாடிய முகத்தொடு மூடிய மனத்தொடும்
உண்ணீர் வேட்கை யுந்தலி னங்கோர்
தெண்ணீர்க் கூவல் சேர்ந்தற னுண்டு
''பட்ட குடியே படுமஃ தான்று
''கெட்ட குடியேகெடு'' மெனக் கூறி
நெட்டுயிர்ப் பெறிந்து நிழல்புகுந் தியங்கும்
வழியிளைப் பொழிக்க மகிழ்ந்தன னிருந்துழி
மானுர் தொடையென மற்றவ ணின்ற
தேனூர் கதலிச் செழும்பழ மூழ்த்து
வண்டமிழ்ப் புலவன் மடிமிசைச் சிலவிழக்
கண்டென வினிக்குங் கனியெடுத் தருந்தி
வெம்பசி தணிதலு மேன்முக நோக்கி
''அடுக்குச் சடைக்கிழக் கிட் டன்ன
பழுக்குலை தூக்கி நெறிப்பட நின்றாய்!
வாழிநீ வாழி வானவர் மக''வென;
''யாரைகொல்? யாதுநின் வரவென வாழ்த்துதற்
கேதுவென்?'' னென்றது ''மியாளொரு புலவன்
வறுமை தூப்ப வந்தன னிருமையும்
பெருமை நிறுத்தும் வள்ளியோர் போலக்
குறிப்பினிற் கொடுத்துக் கொடும்பசி களைந்தனை
மனமது குளிர வாழ்த்தின னினை''யெனக்
கோழரைக் கதலி கூறுமன் ''புலவ!
ஈகையை வியந்தனை யீதொன்று கேண்மதி!
ஓகையி னிலையும் கனிகளு முதவுமென்
தாளையுந் தறித்துத் தலையையு மரியும்
ஏழை மாக்களுக் கீதலோ! கொடி''தென;
''ஈதலி சைபட வாழ்த லிரண்டே
ஊதிய முயிர்க்கென வோதினர் புலவரும்
என்பொரு முனிவ னீந்திசை நிறுவினன்;
தன்பெரு முடலைப் புறவினுக் கருளி
அன்பினை விளக்கிய வரசனு முளனே;
வெட்டுநர்த் தாங்கும் வியன்பெரு நிலமே
கொல்லுநர்க் கருநிழல் கொடுப்பன மரமே
தன்னுயிர் விடுத்து மின்னுயிர் ஓம்புதல்
மன்னிய சான்றோர் மரபென மொழிப
முன்னைநல் வினையால் துன்னிய பொருளை
ஈந்துத வாத மாந்தரு முளரே.
நச்சு மாமரம் நடுவூர்ப் பழுத்தென,
வச்சை மாக்கள் மனிதருட் பதரே.
சற்று முணுதுடல் நெற்றெண வுலரக்
குப்பைக் குறுந்துணி மெய்பட வுடுத்துக்
கைப்பொருள் புதைக்குங் கயவரும் பதரே;
அவரினும் பதரே அவர்வயி னிரப்போர்!
ஈதல் நன்றே ஈதல் நன்றே
சாதல் வரினு மீதல் நன்றே
ஆறி வுடைய வச்சையர் தம்மினும்
ஓரறி வுடையநீ சிறந்தனையே; அதனால்
எய்யா நல்லிசை யிருந்தமிழ்ப் புலவர்
பொய்யா நாவிற் பொருந்தினை வாழியுன்
றாளைத் தறித்துத் தலையை முறிப்பினும்
வழிவழித் தழைத்ததுன் மரபே, கொழிதமிழ்ப்
பாவினிற் பரந்ததுன் புகழே, மூவரில்
ஒருவனென் றேத்திய துலகே, நலமிகும்
உண்டி கொடுத்தென் னுயிர்கொடுத் தனையந்
நன்றி மறவேன் நா''னென் றுரைத்தலும்
மற்றது கேட்ட வாழைமுகங் கோட்டி
''உற்றதொன் றுரைப்ப லுவனுளா னொருவன்
உண்ணா னுடாஅ னொருவனுக் கீயான்
எண்ணி நல்லற மிம்மியும் புரியான்,
பெரும்பொரு ளிருக்கவும் பிச்சைபுக் கீட்டி
அரும்பொருள் கலத்தினிற் செம்மி யிரும்புவி
இட்டன னிறந்தன னிடமுமிஃ திங்குநீ
தொட்டனை யெடுத்துன் துயர்களை''யென்றலும்
''நெஞ்சுவந் தீயும் நிறைபொரு ளன்றி
வஞ்சகப் பொருள்தொட மாட்டேன் நெஞ்சகம்
வருந்தலை வாழி''யென் றோதித்
திருந்திய தமிழ்வலோன் சென்றன னெறியே.



# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[450-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை. (Behaviour)

விளையாட்டு:—(Play) நாய்க்குட்டியும் பூனைக்குட்டியும் தம்மோடும் தாயோடும் ஆடியோடி விழுந்து புரண்டு பிடித்துக் கடித்து விளையாடுவதைக் காண்கிறோம். இவ் விளையாட்டும் ஓர் இயற்கைச்செயலா! இயற்கைச்செயனிலை என்பதும் (Instinct) இயக்க அமைப்பும் (motor mechanism) வேறுவேறு எனக் கண்டோம். ஒவ்வோர் இயற்கைச்செயனிலையினும் சிற்சில இயக்கஅமைப்புக்களே தொழிலுறுகின்றன. ஆனால் குட்டிகளும் குழந்தைகளும் விளையாடும்போது அவர்களுடலின்கண் காணக்கிடக்கும் இயக்கஅமைப்புகள் அனைத்தும் செயலுறுகின்றன. இவ்வாறு அவை இயங்குவதால் பயிற்சி பெறுகின்றன. அதனால் அவ்வுயிருளியும் அச்செயல்களைச் செய்வதில் திறம்பெறுகின்றது. இளமையே இயக்க அமைப்புகள் வளர்ந்து வளம்பெறுகிற காலம், இளமைப்போதில் மட்டும் விளையாட்டு என்பது காணப்பட்டால் அதனையோர் இயற்கைச்செயல் எனக் கூறலாம். ஆனால், இளங் குட்டிகளும் இளம் பிள்ளைகளும் மட்டுமா விளையாடுகின்றன. முதியோரும் விளையாடுகின்றனர்; தாய்ப்பூனையும் விளையாடுகின்றது. இயக்கஅமைப்புகள் மட்டுமேயன்றி இயற்கைச்செயனிலைகள் அனைத்துமே விளையாட்டில் பயிற்சிபெறுகின்றன என்பர் சிலர். நாய்க்குட்டிகள் ஒன்றை யொன்று கடித்துப் புரள்வதையும் ஒன்று வெருட்ட ஒன்று ஓடுவதையும் காண்க. கடிக்கும்போதும் வெருட்டும்போதும் வெகுளி என்ற பேச்சுக்கு இடந்தான் சிறிதேனுமுண்டோ? பல் லூன்றக் கடிக்கின்றனவா அவை? விளையாட்டாகக் கடிக்கும்போது, கடிக்கப்படும் நாய் அதைத் தடுக்கின்றதா? தானே போயன்றோ கடியுண்கிறது. ஓடுகின்ற நாய்க்குட்டியினிடத்தில் அச்சமுண்டென்று கூறமுடியுமா? ஒளிய வேண்டுமென்ற உட்டுடிப்பேனும் உண்டா? விளையாட்டே வினையாய் முடிந்தாலும் முடியும். அப்போது தான் மெய்ப்பாடும் உட்டுடிப்புங்காணக்கிடக்கின்றன. விளையாட்டு விளையாட்டளவிலேயே நின்றால் இவையொன்றும் தோன்றுவதில்லை. மற்றைய இயற்கைச் செயனிலைகளை எழுப்புவதற்குக் குறித்த சில காட்சிப் பொருள்கள் அமைந்துள்ளமைபோல விளையாட்டைத் தொடங்குவிப்பது எந்தக் காட்சிப்பொருள்? விளையாட்டுநிலையில் எப்பொருளும் விளையாட்டுப் பொருளாகின்றது. கண்கால் முதலியவுடற்பொறிகள் வழியே இயக்கஅமைப்புகள் செயலுற்றுப் பயிற்சி பெறுகின்றன. விளையாட்டின் நோக்கம் என்ன? விளையாட்டே விளையாட்டின் முடிவு. வேறொருநோக்கமுண்டாயின் விளையாட்டென்பது வினையாய் முடியும். காலையிலிருந்து மாலைவரை குழந்தைகள் ஓயாமல் விளையாடுகின்றன அன்றோ? இயற்கைச்செயனிலை இயங்குவதில்லை என்றால், இக்குழவி விளையாட்டில் கரைபுரண்டோடும் ஆற்றல் பெருவெள்ளம் எங்கிருந்து வருகிறது. நன்றாக உண்டு இளைப்பாறும் உயிருளியினிடம் நரம்புக்கிளர்ச்சிபொங்கிவழிகிறது. பொங்கி வழிவது இயக்கஅமைப்புகள் வழியாகவெளி வருகிறது. விலங்குண்ட யானை அசைந்தசைந்து தன் நரம்புக்கிளர்ச்சிப் பெருக்கத்தை வெளியிடுகிறது. சிறைப்பட்ட விலங்குகள் உள்ளேயே வேறொன்றும் செய்யமுடியாமற் புரண்டுபுரண்டு உருள்கின்றன. பள்ளிச்சிறுவர்கள் மாலையில் அடைபட்டுக் கிடந்த வகுப்பினின்றும் விழுந்தடித்துக்கொண்டு ஓவென்று கூவிக்கொண்டே ஓடிவருகின்றனர். உயிராற்றலே இவ்வாறு வெளிவருகிறது.

மக்களிடையே விளையாட்டு என்பது ஆட்டமாய் முற்றுகிறது. ஆட்டம் (Games) என்பது வெறும் விளையாட்டன்று. ஆட்டத்தில் ஒரு நோக்கம் உண்டு. உதைபந்தாட்டத்தில் பந்தினைக் குறித்த ஓரிடத்திற்குள் எறிதல் வேண்டும். குழந்தைகள் ஆடும் கண்ணாம்பூச்சி யாட்டத்தில் கண்ணை மூடிக்கொள்வோர் மறைந்துநிற்கும் பிறரைப் போய்த் தொடவேண்டும். ஆதலின் அங்கும் ஒரு நோக்கமுண்டு. சிறு குழவிகள் இவ்வித நோக்கமொன்றுமின்றி விழுந்து புரண்டு ஓவென்று கத்திக் கைதட்டி விளையாடுவது காண்க. அதுதான் விளையாட்டு. ஆட்டத்தில் காணக்கிடக்கும் நோக்கமும் ஆட்டத்தைப் பொறுத்ததேயாம். உலகிடையே நாம் வேலைசெய்யும் போதோ, வேலையை ஒரு கருவியாகக்கொண்டு அவ்வேலையினும் வேறாய ஒரு நோக்கத்தை உட்கொண்டு அதனை நிறைவேற்ற முயல்கின்றோம். ஆனால் ஆட்டத்தின் நோக்கமோ ஆட்டத்தின் கடையுறுப்பாக அமைந்துகிடக்கின்றது. ஆதலின் ஆட்டம் என்பது விளையாட்டிற்கும் வேலைக்கும் இடைவழியில் இருக்கின்றது. இவ்வாட்டத்தில் ஒருவர் மற்றொருவரை இகலி (போட்டி போட்டு - இகலித் தோற்றாள் - என்பது சிந்தாமணி) வெல்ல முந்துகின்றனர். ஆட்டமனைத்தும் உறழ்ச்சியேயாம் (Competition - சுண்ணஉறழ்ச்சி என்பது சிந்தாமணி). இவ் இகல்நிலையை என் என்பது. தன்னெடுப்பும் பெருமிதமும் என முன்னர்க் கூறியதன் ஒருவடிவமே ஈதாம். தன்னுயர்வைக் காட்டுவதே இதன்நோக்கமாகும். இதுமட்டுமன்றிப் பல மெய்ப்பாடுகளும் பிறக்கப் பலவகையான ஆட்டங்களைப் படைக்கின்றோம். வேட்டையாட்டத்தில் அச்சமும் உடனெழுகின்ற தல்லவா? இவ்வளவும் கூறியமையால்விளையாட்டென்பது ஓர் இயற்கைச்செயனிலையன்றென்பது தெளிவாயிற்று.

சாயல்பிடித்தல்(Imitation) ''முன்னோர் போவது போலப் பின்னோர் போகின்றது'':—நாமும் உலகத்தோ டொட்ட ஒழுகுகின்றோம். உலகவழக்கத்தையே பழக்கமாக்கிக் கொள்கின்றோம். தந்தை செய்கின்ற செய்கை ஒன்றைக் காண்கிறான். பிள்ளை அக்காட்சியுணர்வால் தந்தை செய்தபடி அச்செயலைத் திருப்பிச் செய்வதே சாயல்பிடித்தல் எனப்பெறும். இதனை இயற்கைச்செயனிலை எனக் கூற முடியுமா? இயற்கைச் செயனிலை என இயம்புவதற்கில்லை? இதற்கெனக் காட்சிப்பொருளாய் அமைந்துள்ளது யாது? ஒன்றும் இல்லை. இதன் வெளித்தோற்றமோ

பலபல வகையாகப் பரந்து கிடக்கின்றது. இச்செயல் விலங்குகளிடைக் காணக்கிடைப்பதில்லை. ஒரு பெட்டிக்குள் அப்பமொன்றை வைத்து மூடுகின்றேன். கொக்கியிட்டு மூடிவிடுகின்றேன். பின் வந்து கொக்கியை வளையத்தினின்றும் கழற்றித் திறக்கின்றேன். இவை யனைத்தையும் ஒரு குரங்கு பார்த்துக்கொண்டிருக்கிறது. பெட்டியைத் திறப்பதற்குக் கொக்கியை ஏதோ செய்தல் வேண்டும் என்ற அவ்வளவே உணர்கின்றது. திறக்க முயலும்போது கொக்கியை முட்டுகிறது, வலித்திழுக்கிறது. பலவகையாலும் அதை இயக்குகிறது. இவ்வாறு செய்யும்போது கொக்கி வளையத்தினின்றும் கழன்றால் பெட்டியைத் திறக்கிறது. நான் பெட்டியைத் திறந்ததைக்கண்டு அந்தப்படியே அது திறப்பதில்லை; ஆகையால் "சாயல்பிடித்தல்" என்று பேசுதற்கிடமில்லை. முட்டி முயன்று தட்டித்தவறித் தானே திறக்கும் வழியைக் கண்டுபிடிக்கின்றது. குறித்த இடத்தை அறிந்தேயன்றிக் குறித்த செயலையுணரவில்லை. குழுநாட்டம் என்ற இயற்கைச் செயனிலையையும் அதனோடு ஒத்துழைக்கும் தன்னெடுப்பு தன்னொடுக்கம் என்ற இயற்கைச் செயனிலைகளையும் கண்டோம். இவை எவ்வுயிர்களிடையே காணக்கிடக்கின்றனவோ அவை கூட்டமாய் ஒன்றின் பின்னொன்றாய் ஒருவர் தலைமைகீழ்ச் செல்லக் காண்கின்றோம். அவற்றிடையே ஒத்துணர்ச்சியும் உண்டு என அறிந்தோம். சிலர் அஞ்சியோடினால் அனைவரும் அஞ்சி ஓடுகின்றனர். சிலர் விருப்பத்தினால் எதையேனும் பார்க்கப்போனால் அனைவரும் உடன்போகின்றனர். குழுநாட்டமும் ஒத்துணர்ச்சியுமேதான் விலங்கிடைக் காணப்படும் சாயல்பிடித்தலாம்.

கிளி முதலியவை நாம் பேசுவதுபோலவே பேசவில்லையா? இங்கேனும் சாயல்பிடித்தல் என்பது தனித்து விளங்கவில்லையா? இல்லை என்பதே துணிவு. நாம் எங்ஙனம் பேசுகின்றோம் என்றறிதல் வேண்டும். நமது குரல்வளையிலும் வாயிலும் உள்ள பல தசைநார்களின் இயக்கத்தால் பலவகையான ஒலிகள் எழும்புகின்றன. சில தசைநார்கள் இயைந்து இயங்கினால் ஒருவகையான ஒலி எழுகின்றது. இத் தசைநார்களோடு சேர்ந்த இயைபே ஓர் குரலியக்க அமைப்பாம் (Vocal motor Mechanism). வேறு சில தசைநார்கள் இயைந்து இயங்கினால் வேறுவகையான ஒலி எழுகின்றது. இவ்வாறு பல ஒலிகளை எழுப்பப் பல குரலியக்க அமைப்புகள் உள்ளன. இவ்வியக்க அமைப்புகள் இயங்கும்போது ஒலியைக் கேட்கின்றோம். ஒலி புலனாகும்போது தசைநார்களின் இயக்கமும் புலனாகின்றது. அதனால் ஒலியும் தசைநார் இயக்கமும் ஒன்றாக இயைந்து விடுகின்றன. அவ்வொலி கேட்டபோது அதற்கேற்ற குரலியக்க அமைப்புக் கிளர்ச்சியுறுகிறது. அதுபற்றித்தான் குழந்தைகள் ஒருசொல்லைப் பலமுறையும் திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. இவ்வாறு தன்னொலியைக் கேட்டே தன்குரலியக்க அமைப்புச் செயலுறுகின்றது. பின்னர்ப் பிறரொலி கேட்டாலும், அவ்வொலியை எழுப்பும் குரலியக்க அமைப்புச் செயலுறுகின்றது. அவ்வொலியை நாமும் எழுப்புகின்றோம். அவ்வொலிக்கேற்ற இயக்கஅமைப்பு இருந்தால்தான் இஃது இயலுவதாகும். அவ்வாறு கிளி முதலிய சில பறவைகளிடையும் மக்களிடையுந்தான் உள்ளது. பிற உயிருகளிடை யில்லாமையால் அவை நாம் பேசுவதுபோலப் பேசுவதில்லை. ஆகவே, இங்கும் இயற்கைச் செயனிலையினை நாம் காணவில்லை என்க.

இன்னும் வேறுபல செயல்களை இயற்கைச்செயனிலைகள் எனப் பலர் வகுக்கின்றனர். உள்ளத்தியற்கைநூலாராய்ச்சிவாணர்கள் இதைப்பற்றி இதுவரை ஒரு முடிவிற்கு வரவில்லை. ஒருவர் இயற்கைச் செயனிலை 60 என்பர்; மற்றொருவர் பத்தென்பர். இவ்வாறு பலதிறப்பட்ட கொள்கைகள் உலவுகின்றன. இங்குத் தொடர்ந்தெழுதப்பட்டது மக்டேகல் என்பாரின் கொள்கை. ஈது, உலகவழக்கோடு ஒத்துச் செல்வதனையும், தொல்காப்பியரது மெய்ப்பாட்டியலோடு பெரிதும் ஒற்றுமை யுடைமையையும், காண்க. ஆதலாற்றான் மக்டேகல் என்பவரையே நாம் தழுவி எழுதலானோம். இவ்வாராய்ச்சிவாணர்கள் ஒரு முடிவிற்கு வாராமையால் இயற்கைச்செயனிலையைப் பற்றி ஆராய்வதே வீண் என்பர் ஒரு சாரார். இயற்கைப் பொருளமைப்பு நூலோர் (Chemistry) இயற்கைப்பொருள்கள் எத்தனை என்று சென்றநூற்றாண்டில் வழக்காடி நின்றனர். அதுபோது, அவர்களைக் கண்டு நகையாடி இயற்கைப் பொருள்களைப்பற்றி ஆராய்வதே வெறியாட்டெனா எவர் சொல்லத் துணிந்திருப்பர். இதுபோது அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பதுபோல உள்ளத்தியற்கை நூலாராய்ச்சிவாணரும் இயற்கைச்செயனிலைகளைப்பற்றி ஒரு முடிவிற்கு வருவர். இங்கு எடுத்தெழுதப்பட்டவற்றிற்கு மேலும் இயற்கைச்செயனிலைகள் உண்டென்பார் சில உண்மைகளை மறந்துவிடுகின்றனர். மனநிலையாகிய இயற்கைச்செயனிலையினையும் இவற்றின் வெளித்தோற்றமாகிய இயற்கைச்செயல்களையும் வேறு பிறித்தறிய வேண்டும். இயற்கைச்செயல்களை மட்டும் ஆராய்ந்தால் வெகுண்டெழுந்து துடிப்பதற்கும் அஞ்சி நடுங்குவதற்கும் வேற்றுமை யறியாது திகைப்போம். பலசெயல்கள் ஒரு மனநிலையைச் சுற்றிக் குழுமி ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆதலின் செயல்கள் ஒவ்வொன்றினையும் எண்ணிப் போதலால் பயனில்லை. அத்தகைய ஆராய்ச்சிக்கு முடிவே இல்லை. இயற்கைச்செயனிலைக்கும் இயக்கஅமைப்புக்களுக்கும் உள்ள வேற்றுமையை மறவாதிருந்தால் இவ்வாறு இடர்ப்படோம். ஒவ்வொரு செயலுக்கும் முதலாக நிற்கும் ஒவ்வோர் இயக்கஅமைப்பு, இயற்கைச்செயனிலையின் கருவியே யாகும். உயிர்நூலறிஞர்கள் (Biologists) இயற்கைச்செயனிலை யாராய்ச்சி செய்யப்புகுந்தால் அந்நூலுக்கேற்க, இனங்காக்கும் (Preservative) இயற்கைச்செயனிலைகள்; இனம்வளர்க்கும் (Reproductive) இயற்கைச்செயனிலைகள், இனம்கட்டும் (social) இயற்கைச் செயனிலைகள் என்று உலகமலர்ச்சி முறையின் (Evolution) நோக்கத்தை உட்கொண்டு வகைசெய்கின்றனர். அவை யனைத்தும் மலர்ச்சிமுறையின் நோக்கமேயன்றி நம் மனத்தின் நோக்கமன்று. ஆதலின் அவ்வாறு வகைசெய்தல் உயிர்நூலுக்கு ஒக்குமேனும் உள்ளத்தியற்கைநூலுக்கு ஒவ்வாது. தாய்மையையும் இணைவிழைச்சியையும் ஒன்றாய்ப்பிணைத்து இனம்வளர்ப்பன என்றாராய்ந்தால் மனநிலையின் வேற்றுமை எவ்வாறு புலனாகும். தாயைக் கண்டபோதும் மனைவியைக் கண்டபோதும் ஒரே வகையிலா நடந்துகொள்கின்றோம்? இந் நடத்தைவேற்றுமையை ஆராயாமற்போனால் உள்ளத்தியற்கைநூலாராய்ச்சியால் பயன் என்ன?



# இலஞ்சிப் பாவை.

[ 455-வது பக்கத் தொடர்ச்சி ]

## 17. இராதாகிருஷ்ணன் முடிவு.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. — திருக்குறள்.

சுதஞ்சனை மறைந்தபின், ஆலாலனுக்குத் தன் தலைவனைக் காணும் அவா மேலிட்டது. மேகநாதன் நின்றிருந்த புறம்திரும்பித் தொழுத கையினனாய்த் துயர் சேர்முகத்தினனாய், "ஐய, என் தலைவியைப்பற்றிய கவலைதீர்ந்தது. இனி, யான் என் தலைவனைக் காணும் பெரும்பேற்றை எனக்கருளாயோ? அவரது வந்திகன் யான் பிறந்ததுமுதல் இறக்கும்வரை எமையருளாளாளும் தலைவரைப் பிரியாது, அவருக்கு நல்லதுறில் அவருடன் கலந்து களித்தும், தீயதுறின் மருளா மனத்தோடதுபொறுத் தவருடனெய்த்துக் காலங் கடத்தல் எனது குலத்தொழில். எனது மூதாதையர் இக் குலத்தொண்டை மேற்கொண்டதுமுதல் எங் குடியிலித் தொழில்புரிந்தார் பதின்மர். அவருள் ஒருவரேனுந் தந் தலைவனது நன்மையையன்றித் தம் முயிரைப் பெரிதாய்ப் போற்றியவர் இலர். தலைவன் பிறத்தலும் எமது காவலும் தொடங்கும். முகமறியாப் பிள்ளையைத் தொட்டிலிலிட் டுறங்கச்செய்தல் எமது யாழ்; ஐயாண்டுமுத விளமைப்பருவம் நீங்கும்வரை புராணங்களிலுள்ள வீரர்செயல்களை எடுத்தோதித் துணுக்கங்கொள்ளச் செய்வதும், அவர் முதன்முதலில் வேட்டையாடியோ அல்லது சிறுபோர் செய்தோ பெறும் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும் எமது பாடலே. போரிலும் அவரைத் தொடர்ந்து செல்வோம்; உண்ணுங்காலத் துடனுண்டு, ஈறிலும் அந்தோ, இரங்கற்பாக்கள் பாடி முடிப்போம். எனவே இதுகாலம் சிறைப்படல் என் தொழிலுக் குரித்தாயதாதலால் என்னை அவரிருப்பிடங் கொண்டுசேர்க்க" என்றான்.

மே:—"தென்னாட்டிலுள்ள யாங்கள் உரிமைவாய்ந்தவர்; யாமார்க்குங் குடியல்லோம். குலத்தொண்டென்று வழிவழி அடிமைகளாயிருக்க நும் மலைநாட்டாரெங்ஙனம் ஒருப்படுகின்றனர்? எனது தலைவரும் இரக்கங் கொண்டவரே. யான் கலப்பையைக் கையிலெடுப்பதைவிட்டுக் காட்டில் வேட்டையாடித் திரியாமலிருப்பின், இதுபோது நாடு துரத்தப்பட்ட நல்லிணக்க மறியான்போன்று, எனதூர்விட் டிங்குழன்று கொண்டிரேன். உனது தலைவனைக் காண்பாய் வருக" என்றுகூறித் தருக்கொண்ட இருப்புவளையத்தினின்றும் தாழ்க்கோல் கொத்தொன்றெடுத்துத் தீவர்த்தியொன்றைக் கையிற்றாங்கி, இருளடைந்து அச்சமுறத்துஞ் சுரங்கத்தின்வழியே ஆலாலனை அழைத்துச் சென்றான். செல்லுங்கால் சேணிடைச் செல்லவும் கைதிக எழுங்கும் அமலையும், தளைப்பட்டவர் கைகால்களினின் றெழு மிருப்போசையும் அவர் காதுகளிற் பட்டன. கழுவும், திகிரியும், கத்தியுஞ் சூலமும், மனித உறுப்புக்களைக் கூறுசெய் பேரிலாப் பல இயந்திரங்களும் ஒருபால் தென்பட்டன. தாழ்க்கவோர் வாயிலின்முன் நின்று மேகநாதன் ஆலாலனிடம் தீவர்த்தியைத் தந்து தாளிட்ட கதவைத் திறத்தலும், ஒரு சிறுஅறை காணப்பட்டது. அது தாழ்ந்தும் தீவினையென்ன இருள்சேர்ந்து மிராமல் சற்றே ஒளியுற்றிருந்தது. பரிதியின் கிரணங்கள் படிந்தும், சுவரில் சித்திரங்களமையப்பெற்று மிருந்தமையின் அது, உயர்பிறப்பாளர் காவலுக் குரித்தாயதென்றுணர்ப்பாற்று. "வாகடமுணர்ந்த மருத்துவன் வரும்வரை நீ இவ்விட மிருக்கலாம். அரசர் இவனைக் கருத்துங் கண்ணுமாய்ப் பாதுகாக்கிறார்" என்று கூறி மேகநாதன் வெளியிற் சென்று மீண்டும் தாழ்க்கோலிட்டுப்போனான். இதன் அரவங்கேட்டு, படுத்திருந்தவனொருவன் தன் தலையை நிமிர்த்து நோக்கலும், சிறைக்கிடந்தவன், தான் காணவந்த தன்னுயிர்த் தலைவனன்றி, இராதாகிருஷ்ணனென ஆலாலன் அச்சமொடு கண்டான். போர்நிகழும் மலைநாட்டினின்று வந்தமையின் ஆலாலன், இராதாகிருஷ்ணன் இனத்தனெனக் கொள்ளப்பட்டது புதுமையன்று.

ஆர்கலியமுவத்துக் கண்காணு தமிழ்ந்துகிடக்கும் விலங்கலிற் றாக்குண்ட மரக்கலமொன்று, மாலுமிபற்றுச் செலுத்துவாரிழந்து, பாய்மரங்கள்போய், பரவையின் திரைகளா லலைக்கப்பட்டு விரைவில் தன்னகத்துள்ள விலைபெற்ற பண்டங்களொடு அழுந்துந் தருவாயிலிருப்பதுபோல், புகழ்பெறும் போர்வீரனால் தாக்கப்பட்டு வீரம்போய், பெருமைபோய், அருகிருந்து ஆதரிப்பாரற்றுத் தன்னிரு கரங்களையும் மஞ்சத்தின்மேல் அலைத்தலைத்து வீழ்த்தி, தன்னிடத்துள்ள பெருந்தன்மையோடும், வள்ளன்மை முதலிய நற்குணங்களோடும் இறக்குந் தருவாயிலிருந்த இராதாகிருஷ்ணனைக் காண்பாரெவரோ இரங்காதார்? மலையுங் குன்றுங் கடந்துசெல்லும் மதகஜத்தின் நடையெங்கே? ஆயிரம்போர் வீரரை அடிமைகொள்ளும் பார்வை யெங்கே? செருவில், தன்படையில் ஊக்கங் குறைந்தார்க் குறிதியூட்டிப் பகைவரைக் கலக்கும் அரிமா முழக்கமெங்கே? அனைத்தையு மிழந்தவனாய் ஆதரவற்றுநின்ற அன்னான் ஆலாலனைக் கண்டதும், "உன் தலைவி சுதஞ்சனை என்னவானாள்? எனது தாயத்தார் என்ன வானார்கள்? என்தாய் ஓ! என் அன்னை கதி என்ன? ஸ்ரீபாலர் எங்கே? எல்லாவற்றையும் உடனே சொல். நான் சிறைப்படவே இவர்களுக்கெல்லாம் நாசம் வந்துற்றதோ? அவர்களைக் காப்பவர், இவர்களுக்காக இகல்புரிவார், ஒருவருமிலரோ? ஆம்! ஆம். கேட்பானேன். இல்லையேல் நீயே யிங்கு வருகிறாய். இருக்கட்டும்; விடயத்தையெல்லாம் விளங்கச்சொல், பயப்படாதே. யார் சண்டையிட்டது? யார் முதுகு காட்டி ஓடினவன்? யார் நின்று போராடினவன்? ஓ, கிழவா பளார்பளார் என்று பதிலுரை. உன் வழக்கப்படி வளர்த்தாதே கதையை. யார் வீரசுவர்க்கம் சேர்ந்தவர்? யார் மானமிழந்து உயிரோ டிருப்பவர் சொல்! சொல்!' என்றான்.

ஆ:-தலைவ! சற்றே பொறுத்தி. சுதஞ்சனைசுகமே...,

இ:—அப்பா! அதற்காகக் கடவுளுக்குக் கோடி வந்தனம்.

ஆ:—எனது தலைவர், ஸ்ரீபாலரைப்பற்றியும் விரைவில் நல்லசெய்தி கேட்க இடமுண்டென்று அறிகிறேன். தாயும் சுகமே யிருக்கிறாள். உன் படைவீரர் தங்கள் வீரச்செயல்களால் அழியாப் புகழடைந்திருக்கிறார்கள். ஓரே சமயம் பின்னடைந்தாரேனும் அவர்கள் தோல்வியடையவில்லை உன் பனைக் கொடிக்கும் பழுதில்லை.''

இ:—"நல்லது'' எனது பார்வையையும் மாறுதலடைந்த முகத்தோற்றத்தையுங் கண்டு மருளாதே. நமது தீவில் வீரர் செய்கைகளைப் புகழ்ந்து நீ பாடக் கேட்டுளேன். உனது கவித்திறங்காட்டி அன்று நடந்த போரை விவரித்து யாழிலமைத்து இன்னிசை பயிலப் பாடுக. அதுபோது யான் சிதறும் சிந்தையைக் கூட்டி, உன் பாக்கொண்டு எனது படைவீரர் செயல்களையும், பட்டயங்கள் ஒன்றோடொன்று தாக்கி முழங்கினதையும், நேரிற் கண்டு கேட்டவன்போல் களிப்படைவேன். அக்கால் இச்சிறையும், இச்சுவர்களும் மறைய, என திருமருங்கும் பொழில்சூழும் வளநாடு தோன்ற என்னுயிரும் போர்க்களம் நீங்கிப் போவதுபோற் சென்று விண்ணுறும்.''

இதைக்கேட்ட ஆலாலனுக்கு அச்சமே அதிகரித்து நடுக்குறு விரல்களோடு வீணையைத் தைவந்து சிறு குரலெழுப்பிப் பாடிப் பின்னர்ப் போரில் நிகழ்ந்தவை யாவும் நினைவுக்குவரச் சற்றே துணிவுகொண்டு பாடலானான்.

வடிவுடை நெடுமுடி வானுயர் குன்றஞ்சூழ்
கடிபொழில் பலபெறு கவினுறு வுலார்க்கரையில்
கொடியுடைச் செழுமனைக் கொலுமவர்கோமானே

ஆங்கொருசார்

படைப்பரிமா பதாதியொடுவிற்றொழிலார்பனையானை
புடைசூழப்புகழ்படைத்த மன்னனேவுமாறனுற்றான்;
தடைபட்ட தானையுனைக் காணுமல் தயங்கிற்றே.

அன்றியும்

நங்கணவாய் வழிவந்த நட்பில்லா வயவரொடு
பொங்கிப்போர் தொடுத்தவரைப்புறங்கண்டுபோர்முகத்தில்
வெங்கணையால் சோர்ந்துனைக் காணுமல் வெதும்பினரே

அங்கு

வீரரிலாத் தீவகத்தை வேய்த்தோளிர் புகலிடத்தைத்
தீரமிலார் கைப்பற்றத் தீயவனை யேவலுமங்
காரணர்கொள் வீரருனைக் காணும லழுங்கினரே.

அப்போது

சீரிய படகினைச் செம்மையிற் பற்றி
யேரியை நீந்தியோ ரேவலான் செல்லலும்
விடங்கொள் வாளிகள் நம்மவர் விடுத்தார்
மடங்க லின்றி மறவனும் நீந்திடக்
கண்ணுறு மாதரார் கடலொலி கரப்ப
விண்ணெழ விசைத்தனர் வெருவிய கூக்குரல்;
விரைவினில் வீரனும் விரும்பிய வங்கம்
கரையிடை யுற்றுக் கையினிற் கொள்ள
மின்னிய தங்கோர் மின்னனுள் கையும்
துன்னிய தாரகைச் சுடரொளி யென்ன.
அங்கோர் புதுமை யனைவருங் கண்டோம்,
பொங்கிய குருதி பொழிந்திடக் கைபோய்
வீரனும் புனலிடை வீழ்ந்தன னதுதான்
காரணங் கேட்டியேற் கழறுவன் கேளாய்
கூரிய வாளால் கொடியனைப் போழ்ந்தாள்
நாரியர் திலகம் நல்லா ளவளே!

இங்ஙனம் ஆலாலன் பாடுங்காலை யிடையிடை இராதாகிருஷ்ணனை நோக்கி வந்தான். கதுமெனத் தலைவனும் தலைசாய்ந்து கிடக்கக் கண்டு ஓடி யெடுத்தலும் அவனுயிர் இடர்நீங்கி இறைவனடி சேர்ந்ததென வுணர்ந்து இரங்கிநின்றான்.

---

வந்திகன் - புகழ்பாடுவோன். வாகடம் - வைத்திய சாஸ்திரம். ஆர்கலி அழுவம் - கடற்பரப்பு. விலங்கல் - மலை. மடங்கல் - திருப்புதல்.


## ஸ்ரீ. சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தமிழ் வேதங்கள்

ஸ்ரீ ஆத்ம புராணம் ரூ. 8, ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை வசனம் ரூ. 5, நியாயப் பிரகாசம் வசனம் ரூ. 4, வேதாந்த மகா சிந்தாமணி ரூ. 4, தத்துவாநு ஸந்தானம் ரூ 2-8, நியாய முக்தாவளி அணா. 12, கீதாத்திரயம் (பகவத்கீதை, ஈசுவரகீதை, பிரமகீதை வியாக்கியானத்துடன்) ரூ. 2, வருத்தி பிரபாகரம் ரூ. 4.

ஆரணி. குப்புசாமி முதலியார் இயற்றிய துப்பறியும் புதிய நாவல்கள். நிகரற்றவை!

இரத்தினபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன் ரூ. 2-8, கடற்கொள்ளைக்காரர்கள் (2-பாகம்) ரூ. 3-4-0 இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ரூ. 2, கிருஷ்ணவேணி ரூ. 2, சந்திராபாய் அல்லது சங்கரதாஸன் வெற்றி ரூ. 2, இரத்தின புரியின் இரகசியம் (மூன்று பாகமும்) ரூ. 6, கைவல்லிய நவநீத வசனம் ரூ. 1-8, ஆனந்த சிங். ரூ. 2.

இதர புஸ்தகங்கள்.

மாதவி மாறவன் அல்லது ஓர் துணிகரமான சாமார்த்திய ரயில்வேக்களவு (2 பாகம்) ரூ. 2, விக்ரமாதித்தியன் கதை ரூ. 2, வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம். (750 பக்கங்கள்) ரூ. 3, கைத்தொழில் முறைகள் ரூ. 1-8, வர்த்தகக் கணித நூல் அல்லது, தமிழ்புக்கீப்பிங் ரூ. 2, பாரிசக்கதைகள் ரூ. 3, வேதாந்த பாஸ்கரன். ரூ. 3.

V. S. T. Swamy & Co., Book Binding and Novel Depot,
VEPERY, P. O., MADRAS.





## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேராவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் .300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

### குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

### அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை



Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
*Head Office:*-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00

Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
*Managers.* *Branch Secretary, Loane Square, Broadwa y, Madras.*



ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யெளவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




## வர்த்தமானம்

**சென்னை ஜனன மரணம்:**—மே மாதம் 31-ந்தேதியோடு முடியும் ஒருவாரத்தில் சென்னையில் இறந்தவர் தொகை 393, பிறந்தவர் தொகை 521. மொத்தத்தில் 29 பேர் அவ்வாரத்தில் வைசூரி நோயால் பீடிக்கப்பட்டனர்; எனினும் ஒருவரும் அந்நோய் காரணமாக இறக்கவில்லை என்று சென்னைநகர் சுகாதார இலாக்காதார் அறிவிக்கின்றனர்.

⁂

**உத்தியோக நியமனம்:**—தஞ்சையில் ஜில்லா ஜட்ஜியாயிருந்தவரும், திருநெல்வேலி ஸப்ஜட்ஜியாக விருந்தவருமான ஸ்ரீமான் K. S ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் தென்கன்னடம் ஸெஷன்ஸ் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிகின்றது.

⁂

**டில்லியில் தீவிபத்து:**—"சென்ற வாரம் டில்லியில் சத்னிசௌக்கு என்னுமிடத்தில் பெரிய தீவிபத்து ஏற்பட்டது. இதுகாறும் இவ்வளவு பெரிய தீவிபத்து ஏற்பட்டதில்லை யென்று சொல்லப்படுகின்றது. சத்னிசௌக்கில் உள்ள நேஷனல்பாங்கின் கீழுள்ள கடையொன்றில் முதன்முதல் தீப்பிடித்தது. காற்றும் துணைபுரியத் தீ எங்கும் வேகமாய்ப் பரவலாயிற்று. தீ அவிக்கும் வண்டிகள் வந்து மூயன்றும் அரைமணி நேரம்வரை அணைக்க முடியாது போகவே, பல கட்டிடங்கள் நாசமாயின. பாங்குக் கட்டிடம் முழுதும் எரிந்துபோயிற்று. மொத்தத்தில் 15 கட்டிடங்கள் சேதமாயின. இத்தீயினால் 15 லட்சம் ரூபாய் சேதம் என்று மதிப்பிடப்படுகிறது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை" என்று டில்லிச்செய்தி மூலம் தெரிய வருகின்றது.

⁂

**ஸ்ரீசெட்டியப்ப செட்டியாருக்குஉபசாரம்:**—மலாய் நாட்டிலுள்ள ஈபோவில் பிரபலதனவைசியரானஸ்ரீமான் S.L S செட்டியப்பசெட்டியார் கெ. பி. பட்டம் பெற்றதை ஒட்டி ஈப்போ நகரத்துத்தனவைசிய வியாபாரிகள் ஒரு உபசாரக் கூட்டம் கூடினர். அச்சமயம் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களோடு பல இந்திய ஐரோப்பிய கனவான்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். செட்டியார் அவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று படித்துக் கொடுக்கப்பட்டது. செட்டியார் அவர்கள் தக்கபடி பேசினர். பின்னர்க் கூட்டம் நிறைவுற்றது, என்று மலாய்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

⁂

**ஸ்ரீ பெஸண்டின் முயற்சி:**—ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார், இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்துக் கொடுக்கவேண்டியதைப்பற்றி லண்டனில் பிரசாரம் செய்துவருகின்றார். கூட்டமொன்றில், குடியேற்றநாட்டு உரிமைக்கான ஏற்பாடு செய்யவே ரவுண்டேபில் மஹாநாடு கூடவேண்டுமென்றும், அதற்கானபடி அதிகாரிகள் முயன்றால் இந்தியாவில் அமைதி ஏற்படும் என்றும், எனவே பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் சமாஸ முயற்சியில் இறங்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார், என்று தெரிய வருகிறது.

⁂

**ஸ்ரீ டாகூரின் படங்கள்:**—ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூர் எழுதிய சித்திரப்படங்கள் லண்டன் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், பத்திரிகை நிருபர் ஒருவரிடம் அவர், தமக்குச் சித்திரம் எழுதுவதில் அதிக பயிற்சிஇல்லை யென்றும், சித்திரம் உண்மையை விளக்குவதற்குரிய சாதனம் என்று கூறினர் என்றும், தெரிகின்றது.

* * *

**சமரஸமுயற்சி:**—இப்பொழுது கொடைக்கானலில் இருந்துவரும் 65 ஐரோப்பிய பாதிரிமார்களும், சில இந்திய கிறிஸ்தவர்களும் சேர்ந்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

கடவுளுடைய சித்தம் சகோதரத்துவம். ஸர்வதேச ஜனங்களாகிய குடும்பத்தில் கௌரவமும் சமத்துவமும் பெறுவதற்கு இந்தியர் முயல்கின்ற முயற்சியை நாங்கள் மனப்பூர்வமாய் ஆதரிக்கின்றோம். இப்பொழுது இந்தியாவில் நடைபெறும் இயக்கத்தால் இந்தியாமீது இங்கிலாந்திற்குக் கோபம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இருதிறத்தினோரும் கோபத்தையும் சந்தேகத்தையும் விடுத்துப் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். அதற்கு இருவகையினரும் கலந்து பேசவேண்டும். இதற்கெனச் சர்வகட்சி மஹாநாடு ஒன்று உடனே கூடவேண்டும்.

"கடவுளுடைய சங்கல்பம் என்னவென்பதை அறியவும் அதன்படி எல்லோரும் நடக்கவும் வேண்டுமாதலால் அச்சங்கல்பத்தை அறிவதற்கும் அதன்படி நடப்பதற்கும் எல்லோரும் கடவுளை இந்தியாவிலும் பிரட்டனிலும் தொழவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். பரஸ்பர நலஎண்ணத்தை விருத்திசெய்யவும், இந்தியா முன்னேறும் வகையிலும் எல்லோரும் தங்களால் இயன்றவழியில் முயலவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

⁂

**ருமேனியா புதிய அரசர்:**—ருமேனியாவின் இளவரசராயிருந்த பிரின்ஸ் கரோல் தமது மனைவிஇருக்கையில், ஒருகுடியானவர் பெண்ணையும் மணந்துகொண்டதால் அரசர் இவருக்குப் பட்டத்தை மறுத்துக் கரோலின்புதல்வரான ஏழுவயதுக் குழந்தைக்குஇளவரசு தந்தார். அரசர் இறந்ததும் அக்குழந்தைக்குப் பட்டம் அளிக்கப்பட்டது. சமீபத்தில் கரோல் ருமேனியா வந்து சேர்ந்தார். மந்திரிசபை கூடி ஆலோசித்துக்கரோலுக்குப் பட்டத்தை அளித்தது. கரோலை அரசராக்கினர். இரண்டாவது மனைவியையும் விட்டுவிட்டார் என்று தெரிகின்றது. இவரது முதல்மனைவி இவர் பட்டம் பெறுவதற்குத் தடைசெய்யவில்லை எனினும் தமது கணவனோடு சேர்ந்துவாழமாட்டார் என்று தெரிகின்றது.

189/08

⁂

**விமானிக்குஉபசாரம்:**—அகாகான் பரிசுபெற்றஇந்திய ஆகாசவிமானியாகிய மிஸ்டர் இஞ்சினியிருக்குக் காரச்சி முனிசிபாலிட்டியார் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். வெள்ளியினால் செய்யப்பட்ட ஆகாயவிமானம் ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டது. மற்ற இந்தியர்களும் இவரைப் பின்பற்ற வேண்டுமென்று கூறப்பட்டது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா ரூபா 2 0 0
வெளிநாடு ,, ,, 2 8 0
தனிப்பிரதி விலை அணா 0 4 0

விலாசம்:—'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்தன இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருட்சந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி. பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)